பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 01 சனிக்கிழமை (15-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:202

# இந்திய எரிபொருள் விற்பனை நிலையங்கள் வடக்கு - கிழக்கில் விரைவில் திறக்கப்படும்

## திருமலை குதங்களிலிருந்து விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

திருகோணமலையில் குத்தகைக்குப் பெற்றுள்ள எண்ணெய்க் குதங்களில் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர் இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனம் வடக்கு - கிழக்கில் எரிபொருள் விற்பனை நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் இலங்கை முகவர் நிறுவனமான 'டேவிட் பீரிஸ் மோட்டோஸ்' நிறுவனத்தின் சந்தைப்படுத்தும் பிரிவு முகாமையாளர் சிடத் றொட்றிக்கோ (Sidath Rodriga) இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.



டேவிட் பீரீஸ் மோட்டேர்ஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தும் முகாமையாளர் சிடத் றொட்றிக்கோ.

இலங்கைச் சந்தையில் தனது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான முகவராக டேவிற் பீரிஸ் மோட்டேர்ஸ் நிறுவனத்தை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் நியமித்தது. கடந்த ஆறு மாதகாலத்துக்கு முன்பு இந்த நியமனம் செய்யப்பட்டது. 'சேவோ' (Servo) ரக இயந்திர எண்ணெய்யை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் முதலில் இலங்கையில் சந்தைப்படுத்தியது. பெற்றோல், மண்எண்ணெய், டீசல் போன்ற எரிபொருள்களை விற்பனை செய்ய திருகோணமலையில் களஞ்சிய வசதியைப் பெற்றுள்ளது.

தமது நிறுவனத்தின் சேவை தொடர்பாக றொட்றிக்கோ மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலையில் உள்ள 103 எண்ணெய்த் தாங்கிகளை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் குத்தகைக்குப் பெற்றுள்ளது. அவற்றில் 17 தாங்கிகளே உடனடியாக பாவிக்கக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றில் எரிபொருள்களைக் களஞ்சியப்படுத்தும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் புறம்பாக இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் தனது பணியை மேற்கொள்ளும்.

முதலில் வடக்கு-கிழக்கில் எரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



...அப்ப கடலில இறங்க முன்னரே வயித்தில அடி எண்டு சொல்லுங்கோ...!

### ஏ-9 கண்டி வீதியூடாக

## 7 மணிமுதல் 5.30 வரை இனிப் போக்குவரத்து

யாழ்ப்பாணம்,ஜூன்15

ஏ-9 கண்டி வீதி ஊடான பொது மக்கள் போக்குவரத்து எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து காலை 7 மணிமுதல் மாலை 5.30 மணிவரை இடம்பெறும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி செல்வி சிசிலி குறொஸ் தெரிவித்தார்.

முகமாலை, ஓமந்தை சோதனை நிலையங்கள் ஊடான போக்குவரத்து நேரங்களை அதிகரிப்பது தொடர்பாக அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடி இணக்கம் கண்டதை அடுத்தே நாளைமறுதினம் முதல் புதிய நேரப்படி போக்குவரத்து இடம்பெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது முகமாலை மற்றும் ஓமந்தை ஊடான பொதுமக்கள் போக்குவரத்து காலை 8மணிமுதல் மாலை 4 மணிவரை மட்டுமே நடைபெற்றுவருகிறது.

(ஐ-3)

## தரைவழியாக வாராந்தம் நோயாளர் பயணச் சேவை

### 27 ஆம் திகதிமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் பயண சேவை எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் கண்டி வீதி ஊடாக இடம்பெறவுள்ளது.

இந்தச் சேவையை பரீட்சார்த்தமாக கடந்த 6 ஆம் திகதி செஞ்சிலுவைச சர்வதேசக்குழு நடத்தியிருந்தது. பரீட்சார்த்த சேவை திருப்தி அளித்ததை அடுத்து நோயாளர் சேவையை எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் வாராந்தம் தொடர்ந்து தரைவழியாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தரைவழிச் சேவை ஆரம்பிக்கப்படுவதால் இதுவரை காலமும் கடல் வழியாக நடத்தி வந்த கப்பல் சேவையை எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் நிறுத்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகத் தகவல் மையம் செயலகத்தில் நாளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இன்று வருகின்றார்.

இன்று நண்பகல் இங்குவரும் அமைச்சர், பிற்பகல் 2மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் பங்குபற்றுவார்.

அதைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.தபாலகத்தில் தகவல் தொடர்பு நிலையத்தை வைபவரீதியாக அவர் ஆரம்பித்து வைப்பார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி

# வலி.வடக்கு மக்கள் பேரணி! மறியல்!

### அடுத்த வாரம் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்15

**வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இருந்து நீண்ட காலமாக இடம்பெயர்ந்து வசிக்கும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி அடுத்த வாரம் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.**

**யாழ்.அரச செயலகத்தை நோக்கிப் பேரணி ஒன்றை நடத்தவும், வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்பாக மீண்டும் மறியல் செய்யவும் வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.**

வலி.வடக்கில் இருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த காலங்களில் - பல கட்டங்களாக - இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் குடாநாட்டின் ஏனைய இடங்களில் வசித்துவருகின்றன.

இவர்களது சொந்த இருப்பிடங்கள் அழிக்கப்பட்டும், ஆக்கிரமிக்கப்பட்டும் உள்ளன.

தங்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கேட்டு இந்த மக்கள் பல முறை சாத்வீகப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். எனினும் அரசு அதற்கு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.

கடைசியாக வலி.வடக்கு மக்கள் கடந்த மாதம் 15ஆம் திகதி பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவருக்கான நிவாரணம் இம்மாதத்துடன் நிறுத்தம்?

கொழும்பு,ஜூன்15

குடாநாட்டில் கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் இலவச உலர் உணவு நிவாரணம் அடுத்த மாதம் முதல் நிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு மாதாந்தம் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது இரவு - பகல் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் இந்த நிவாரணத்தை அடுத்த மாதம் முதல் நிறுத்திவிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பான உத்தரவு யாழ். செயலகத்துக்கு ஓரிரு தினங்களில் விடுக்கப்படலாம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

(ஐ-3)

### மிக நீண்ட காலத்தின் பின்னர்

## குடாக்கடலில் நேற்றிரவு 50 வள்ளங்களில் மீன்பிடி!

குருநகர்,ஜூன்15

சுமார் ஏழு ஆண்டுகளுக்குப் பினனர் குடாக்கடலில் நேற்று இரவு மீன்பிடிக்க மீனவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இரவுநேர ஆழ்கடல் மீன்பிடித் தொழில் ஈடுபடுவதற்காக சுமார 50 வள்ளங்களில் மீனவர்கள் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் குருநகர் இறங்குதுறையில் இருந்து புறப்பட்டனர்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில நேற்றுமுன்தினம் நடந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மீனவர்கள் இரவு நேர ஆழ்கடல் மீன்பிடித்தலுக்குப் படையினரால் அனுமதிக்கப்பட்டனர்.

1996 ஆம் ஆண்டு குடாநாட்டில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் குடாக்கட்லில் இருந்து காலை 6 மணி முதல் மாலை 3 மணி வரை மட்டுமே மீன்பிடிக்க மீனவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-3-51)

## நேபாளத் தீவிரவாதிகளுக்கு புலிகள் உதவுகின்றனராம்!

### நோர்வேயிடம் அந்நாடு முறைப்பாடு

காத்மண்டு,ஜூன்15

நேபாளத்தின் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு விடுதலைப் புலிகள் உதவியும் பயிற்சியும் வழங்கி வருவதாக நேபாள அரசு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

புலிகளின் இந்த நடவடிக்கை குறித்து நோர்வே தரப்புக்கு நேபாளம் முறையிட்டிருக்கிறது.

நேபாளத்தில் மிக நீண்டகாலமாகப் போராட்டம் நடத்திவரும் மாவோ கிளர்ச்சியாளர்கள் தற்போது விடுதலைப் புலிகளிடம் பல்வேறு உதவிகளைப்பெற்று செயற்பட்டுவருகின்றார்கள். அவர்களின் செயற்பாடுகளுக்கு உதவுவதை விடுதலைப் புலிகள் நிறுத்தவேண்டும் என்று இலங்கைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### சரணடைந்தோர், மன்னிப்பு அளிக்கப்பட்டோரை பராமரிக்கும்

# தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம்

# பெரும் நிதி நெருக்கடியால் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்15

போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்காததால் புனர்வாழ்வு நிலையத்தைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையப் பொறுப்பதிகாரி மேஜர்.பி.என்.சி. ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பின்னா பொது மன்னிப்பு வழங்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் நிலையம் ஒன்று தெல்லிப்பழையில் இயங்கி வருகின்றது. இந்த நிலையத்தில் வைத்து பல்வேறுபட்ட புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் புனர்வாழ்வு முகாமில் 80 இற்கும் மேற்பட்டவர்கள் தங்கிப் பயிற்சிபெற்று வந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பயிற்சியை முடித்த பின்னர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தற்சமயம் 38 பேர் மட்டுமே அங்கு தங்கியுள்ளனர். அவர்கள் பாடசாலைக் கல்வி, கணனிப் பயிற்சி, தொழில் பயிற்சி ஆகியவற்றைப் பெற்று வருகின்றனர்.

இந்த நிலையத்தின் பொறுப்பதிகாரியாகப் பணிபுரியும் மேஜர் ஜெயவர்த்தனா தமது நிலையத்தின் குறைபாடுகளை விளக்கிக் கூறினார். அவர் தெரிவித்ததாவது:-

இந்தப் புனர்வாழ்வு நிலையத்தை இளைஞர் விவகார அமைச்சே நடத்தி வருகின்றது. மாதாந்தம் மூன்றரை லட்சம் ரூபாவை அமைச்சு வழங்குகின்றது. இந்த நிதி மூலம் முகாம் பாரமரிப்பு, பயிற்சி ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் நிதி கிடைக்காததால் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளோம். முகாமுக்குத் தேவையான உணவுப் பொருள்களை தனியார் வர்த்தகர்களிடம் கடனுக்குப் பெற்று முகாமைப் பராமரிக்கின்றோம். சுமார் 15 லட்சம் ரூபா கடன் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். போதிய நிதி கிடைக்காததால் முறைப்படி பயிற்சிகளை அளிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் எமது நிலையத்தில் இரு வாகனங்கள் உள்ளன. அவற்றைச் செலுத்த சாரதிகள் இல்லை. இப்படிப் பல பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே இந்த நிலையத்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம் - என்றார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களும் படையினரிடம் சரண் அடைந்து பொது மன்னிப்பு வழங்கப்பட்டவர்களுமே இங்கு தங்கியுள்ளனர். அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்த பின்னர் வேலை வாய்ப்புப் பெறுவதிலும் சிக்கல் ஏற்படுகின்றது. நிர்வாக சேவையில் அவர்களை இணைக்க முடியாது. அதற்கான அறிவு அவர்களுக்கு குறைவு. பாதுகாப்புத் தொடர்பான சேவையில் மட்டுமே அவர்களை இணைக்கமுடிகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜே.வி.பியின் போராட்டம் முடிவுக்கு வந்தபோது அந்த அமைப்பில் இணைந்து செயற்பட்டவர்களுக்கு பெரிய அளவில் பயிற்சி வழங்கப்பட்டது. அதன் காரணமாக அவர்கள் இன்று பெரும் அரசியல் வாதிகளாகிவிட்டார்கள் என்று குறிப்பிட்ட மேஜர் ஜெயவர்த்தன - புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய நீரோட்டத்தில் இணைந்துள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை நற்பிரஜைகளாக உருவாக உதவத் தயாராக இருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

கடந்த மூன்றரை வருடங்களாக இந்த நிலையத்தை நடத்தி வந்த போதும் விடுதலைப் புலிகளால் தமக்கு எந்தவித அச்சுறுத்தலும் விடுக்கப் படவில்லை என்றும் அவர் 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.(ஐ-3)

# வவுனியா பஸ் மீது பொலீஸ் தாக்கு!

## உறுதிமொழியால் பகிஷ்கரிப்பு முடிவு

வவுனியா,ஜூன்15

வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் அடையாள பகிஷ்கரிப்பொன்றை நேற்று மேற்கொண்டனர். ஒரு சில மணிநேரத்தில் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது.

சாரதி ஒருவர் பொலீஸாரினால் தாக்கப்பட்டதையடுத்தே இப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை வவுனியாவில் இருந்து செட்டி குளத்திற்குச் சென்ற பஸ் வண்டியை, அடம்பன் குளப்பகுதியில் வைத்து பொலீஸார் இடைமறித்து ஃபுட்ி மிதிபலகையில் நின்று பயணம் செய்தனர்.

இதனால் சாரதிக்கு முன்பக்க கண்ணாடி மறைக்கப்படவே, பொலீஸாரை உள்ளே ஏறுமாறு கூறினார்.

இதனையடுத்து, பொலீஸார் சாரதியைக் கடுமையாகத் தாக்கி கைது செய்தனர். பின்னர் செட்டிகுளம் வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்று, அங்கு வைத்தும் சாரதியைத் தாக்கினராம். சாரதி மது போதையில் இருந்ததாலேயே கைது செய்தோம் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இதனை மறுத்த போக்குவரத்து அதிகாரி ஒருவர் பொலீஸார்தான் போதையில் இருந்தனர் என்று தெரிவித்தார்.

(ஐ)

# கல்வியமைச்சர் - ஆசிரியர் சங்கம்

# 20 ஆம் திகதி சந்திப்புக்கு ஏற்பாடு

## தீர்வு இன்றேல் தொடர்ச்சியான போராட்டம்

காரைநகர்,ஜூன்15

கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தினரை கொழும்பு இசுருபாயவில் சந்திக் கவிருக்கிறார். இச்சந்திப்பிற்கான அழைப்பை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ். திசாநாயக்க விடுத்திருக்கிறார் என்று செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் 3,000 ஆசிரியர்களை நியமிப்பதில் காட்டப்படும் மெத்தனப் போக்கு குறித்தும் 14 அம்சக் கோரிக்கைகள் குறித்தும் இச் சந்திப்பில் பேசப்படும். நல்ல முடிவு கிடைக்காவிடின் 24 ஆம் திகதி முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று சங்கத்திற்கு வெளி அழுத்தங்கள் கிடைத்து வருகின்றன. இதனால் ஏனைய ஆசிரிய சங்கங்களுடன் இணைந்து பூரண போராட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

# கூட்டணி தேசியப் பட்டியல் எம்.பியாக துரைரத்தினசிங்கம் தெரிவாகுவது உறுதி

கொழும்பு,ஜூன்15

அமரர் மு.சிவசிதம்பரத்தின் இடத்துக்கு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த துரைரத்தினசிங்கம்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட இருக்கிறார். இவரை நியமிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமை பச்சைக்கொடி காட்டிவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை விரைவில் கூடி, முறையாக முடிவெடுத்து துரைரத்தினசிங்கத்தின் நியமனத்தை அறிவிக்கும்.

துரைரத்தினசிங்கம் கடந்த 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்.

திருகோணமலை மாவட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி வகித்தவர்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் உள்ள தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் சிலர் கூட்டணித் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியைப் பெறப் பெருமுயற்சி செய்தனர்.

கூட்டமைப்புக்கு பொதுத்தேர்தலில் ஒரேஒரு தேசியப்பட்டியல் எம்.பி. நியமனம் கிடைத்தால் நான்கு கட்சிகளும் தேர்தலுக்கு முன்னர் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி அந்த நியமனம் வேறு எந்தக் கட்சிக்கும் இல்லை; தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத்தான் என்றாகி விட்டது.

மானிப்பாய் கிராமசபையின் முன்னாள் தலைவர் முத்துலிங்கத்துக்குக் குறுகிய காலத்துக்கு நியமனப்பட்டியல் எம்.பி. பதவி வழங்குவதாகத் தேர்தலுக்கு முன்னரே வாக்குறுதி அளிக்கப்பட்டுவிட்டது. அதனால் அவரே தேசியப்பட்டியல் எம்.பியாக வேண்டும் என்று அவருக்கு ஆதரவு தேடினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ஆனந்தசங்கரி. அவருடைய முயற்சியும் கைகூடவில்லை.

முத்துலிங்கம் 77 வயதானவர். தவிரவும் வடபகுதியைச் சேர்ந்தவர். வடக்கில் இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி எம்பிக்கள் மூன்றுபேர் இருக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி. ஒருவர் மட்டும் இருந்தாலும் வேறு தமிழ் எம்.பிக்களும் அங்கு உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலும் அதே நிலை.

திருகோணமலையில் தமிழ் எம்.பி. என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் ஒருவர் மட்டும்தான் இருக்கிறார். ஆகவே, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப்பட்டியல் எம்.பி. பதவி, திருகோணமலை மாவட்டத்துக்குக் கிடைப்பதே பொருத்தம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர்கள் முடிவுசெய்தார்கள். இதுபற்றி அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையுடன் கலந்து ஆலோசித்தார்கள்.

தேசியப்பட்டியல் எம்.பி. பதவி திருகோணமலைக்குக் கிடைப்பதை புலிகளின் அரசியல் தலைமை அங்கீகரித்தது. துரைரத்தினசிங்கத்தை நியமிப்பது குறித்து தலைமை திருப்தி அடைந்தது.

இந்த நிலையில் துரைரத்தினசிங்கத்தின் நியமனம் நிச்சயமாகிவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை கூடி அவரின் நியமனத்தை உறுதிசெய்வதுதான் பாக்கி.

## சைவசமய கட்டுரைப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் கோயில் மஹோற்சவத்தையொட்டி ஐயனார் கோயிலடி மாதர் அபிவிருத்திச் சங்கம் ஏனைய மாதர் அபிவிருத்திச் சங்கங்களுடன் இணைந்து நடத்தும் சைவசமயக் கட்டுரைப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 3 முதல் தரம் 13வரையான மாணவர்கள் மேற்படி பரீட்சையில் பங்குபற்றலாம் எனப் போட்டி அமைப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

ஜப்பான் தென்கொரியா

## உலகக் கிண்ண கால்பந்து

31.05.2002 - 30.06.2002



அமெரிக்க (வலது) மற்றும் போலண்ட் அணிகளிடையேயான ஆட்டம்.

# ஜப்பான், தென்கொரியா அடுத்த சுற்றுக்குத் தகுதி

சியோல்,ஜூன்15

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் ஆரம்பச்சுற்றின் கடைசி ஆட்டங்கள் நான்கு நேற்று நடைபெற்றன. இவற்றில் ஜப்பான், தென்கொரியா, பெல்ஜியம், போலண்ட் என்பன வெற்றிபெற்றன.

முதலாவது ஆட்டம் பெல்ஜியம் மற்றும் ரஷ்யா இடையே இடம்பெற்றது. 3-2 என்ற கோல் அடிப்படையில் பெல்ஜியம் வெற்றிபெற்றது. ஆட்டம் ஆரம்பமான 7ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் ஜோஹான் வால்ம் (Free kick) கட்டுப்பாடற்ற உதை ஒன்றை அழகாக கோலாக்கினார். முன்பாதி ஆட்டம் நிறைவடையும் வரை இந்த ஒரு கோலுடன் பெல்ஜியம் முன்னிலை வகித்தது. பின்பாதி ஆட்டம் ஆரம்பமான 7 ஆவது நிமிடத்தில் ரஷ்ய வீரர் விளாடிமிர் ஒரு கோலை அடித்து ஆட்டத்தை சமப்படுத்தினார். ஆட்டத்தின் 78ஆவது நிமிடத்தில் வெஸ்லி நொக் ஒரு கோலை அடித்து பெல்ஜியத்தை மீண்டும் முன்னணிக்குக் கொண்டு வந்தார். அடுத்த 4 நிமிடங்களில் பெல்ஜியம் வீரர் மார்க வில்மோட்ஸ் மீண்டும் ஒரு கோலை அடித்து தனது அணியை பலமான நிலைக்குக் கொண்டு வந்தார். 89 ஆவது நிமிடத்தில் ரஷ்ய வீரர் திமீத்தி சச்சவ் தன் அணிக்காக ஒரு கோலை அடித்தார். எனினும் இறுதியில் 3-2 என்ற கோல் அடிப்படையில் பெல்ஜியம் வென்றது. இரண்டாவது சுற்றில ஆடும் தகுதி பெற்றது.

இரண்டாவது ஆட்டம் ஜப்பான் மற்றும் ருனிஷியா அணிகளிடையே இடம்பெற்றது. 2-0 என்ற கோல் அடிப்படையில் ஜப்பான் வென்றது. இதன் மூலம் உலகக் கிண்ணப் போட்டியின் இரண்டாம் சுற்றில் ஆடும் தகுதியை முதல் முறையாக ஜப்பான் பெற்றுள்ளது.

ஆட்டத்தின் முன்பாதியில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. பின்பாதி ஆட்டம் ஆரம்பித்த முதல் நிமிடத்தில் ருனிஷியாவுக்குக் கிடைத்த பெனால்டி வாய்ப்பை நழுவ விட்டார் அந்த அணி வீரர் ஹட்டம் ரபிள்ஸி. 48ஆவது நிமிடத்தில் ஹிரோகாய் மொறிஷி ஒரு கோலை அடித்தார். 74ஆவது நிமிடத்தில் ஹிட்டோஷி நஹாட்டா தலையால் மோதிய பந்து ருனிஷிய கோல் காப்பாளரின் கால்களிடையே புகுந்து சென்று கோலானது. இறுதியில் 2-0 என்ற கோல் அடிப்படையில் ஜப்பான் வென்றது.

மூன்றாவது ஆட்டம் பொலண்டுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நடந்தது. 3-1 என்ற கோல் அடிப்படையில் பொலண்ட் அமெரிக்காவை வென்றது. ஆட்டம் ஆரம்பித்த 5 நிமிடங்களில் பொலண்ட் வீரர்கள் இரு கோல்களை அடித்தனர். 3ஆவது நிமிடத்தில் இமானுவல் ஒலிசாட் முதலாவது கோலை அடித்தார். அடுத்த இரு நிமிடங்களில் பவல் ஹறிஸால் ஒரு கோலை அடித்து அணியின் நிலையை முன்னிலைப்படுத்தினார். பின்பாதி ஆட்டத்தில் அந்த அணியின் துணைஆட்டக்காரர் (Substitute) மார்கின் ஸிவல்கோ ஒரு கோலை அடித்து கோல் எண்ணிக்கையை 3 ஆக்கினார். பதிலுக்கு அமெரிக்க வீரர் லண்டன் டொனோவான் 83ஆவது நிமிடத்தில் ஒரு கோலை அடித்தார். இறுதியில் 3-1 என்ற கோல் அடிப்படையில் பொலண்ட் வென்றது. எனினும் ஏற்கனவே இரு ஆட்டங்களில் தோற்றதன் மூலம் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெறும் நிலையைப் அந்த அணி இழந்தது.

நான்காவதும் முக்கியமானதுமான ஆட்டம் தென்கொரியாவுக்கும் போர்த்துக்கலுக்கும் இடையில் இடம்பெற்றது. ஒரு கோல் அடித்து தென்கொரியா வென்றது. இந்த ஆட்டத்தில் வெல்லும் அணியே இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெறும் என்ற நிலை இருந்ததால் இரு அணிகளும் மிக உக்கிரமாக மோதின. முன்பாதி ஆட்டத்தில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. பின்பாதியில் ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் தென்கொரிய வீரர் பார்க் ஜி-ஷுங்கின் மிக மிக நேர்த்தியான உதை அவருக்கு ஓர் அற்புதமான கோலைப் பெற்றுத்தந்தது. அதுவே அணியின் வெற்றியையும் நிர்ணயித்தது. இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் தென்கொரியா வெற்றி பெற்றது. இதன் மூலம் இரண்டாம் சுற்றில் ஆடும் தகுதியை முதன்முறையாகப் பெற்றுக்கொண்டது. (ம)

## இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜூன்15

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

- ஜேர்மனி எதிர் பரகுவே (கொரியா - பகல் 12.30)
- டென்மார்க் எதிர் இங்கிலாந்து (ஜப்பான்- மாலை 5.30)

(ம)

# ஆப்கான் அதிபராக மீண்டும் ஹமீட் ஹர்சே!

## தேர்தலில் அமோக வெற்றி!!

காபூல்,ஜூன்15


ஆப்கானிஸ்தானின் அதிபர் தேர்தலில் ஹமீட் ஹர்சே பெருவெற்றி பெற்றுள்ளார். ஆப்கானிஸ்தானில் செல்வாக்கு மிக்க பழங்குடி இனத் தலைவர்களின் 'லோயா ஜிர்கா' மாநாடு தலைநகர் காபூலில் நடை பெற்று வருகிறது. அங்கு இடம்பெற்ற தேர்தலில் மொத்தம் 1500 வாக்குகளில் ஹர்சே 1295 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு 'லோயா ஜிர்கா' ஆணையம் இந்த முடிவுகளை வெளியிட்டது. ஹர்சேயை எதிர்த்துப் போட்டியிட்ட பெண் மருத்துவரான முசோரே ஜலாலுக்கு 121வாக்குகள் மட்டுமே கிடைத்தன. தோல்வியை ஏற்றுக்கொண்ட அவர், ஜனநாயகம் வெற்றிபெற்றிருக்கிறது என்றும் - புதியதோர் சூரியன் உதயமாகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

சென்ற ஆண்டு போன் நகரில் இடம்பெற்ற ஐ.நாவுடனான பேச்சுக்களையடுத்து ஹர்சே ஆப்கானிஸ்தானின் இடைக்காலத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

25.ஆண்டுகளுக்குப் பின்னர் ஆப்கானிஸ்தானின் மக்கள் தற்போது ஒரே அமைப்பின் கீழ் செயற்பட உள்ளார்கள் என்று தேர்தலில் வென்ற பின்னர் ஹர்சே தெரிவித்தார்.

முன்னாள் தலிபானின் சில உறுப்பினர்களுடன் புதிய அரசு 'தேசிய சமரசம்' செய்துகொள்ளவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-9)



# இந்திய ஜனாதிபதியாகிறார் அணு விஞ்ஞானி அப்துல் கலாம்

புதுடில்லி,ஜூன்15

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளதனால் பிரபல அணுசக்தி, பாதுகாப்புத்துறை விஞ்ஞானி கலாநிதி ஏ.பி.ஜே.அப்துல் கலாம் இந்திய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

சில இடதுசாரிக் கட்சிகளைத் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் இவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

அப்துல் கலாம் தமிழ்பேசும் முஸ்லிம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## பாடசாலை விடுதியில் தீ விபத்து; 8 மாணவர் பலி

பீஜிங்,ஜூன்15

சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள பாடசாலை விடுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் 8மாணவர்கள் பலியாகினர்.

இந்த விடுதியில் கடந்த ஞாயிறன்று இரவு மாணவர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது தீ பரவியுள்ளது. 9முதல் 13வயது வரையிலான மாணவர்களே பலியாகியுள்ளனர். மாணவிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.(ம)

## பாதாள சாக்கடைக்குள் விழுந்த சிறுவன் 5 மணி நேரத்திற்குப் பின் உயிருடன் மீட்பு!

### கனடா ஒட்டாவா நகரில் சம்பவம்

ஒட்டாவா,ஜூன்15

பாதாள சாக்கடைக்குள் விழுந்த சிறுவனொருவன் 5 மணி நேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டான்.

இந்த ஆச்சரியமான சம்பவம் கனடாவின் ஒட்டாவா நகரில் இடம்பெற்றுள்ளது.

கிறிஸ்டோபர் வாட் (வயது 15) என்ற சிறுவன் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த சமயம், பாதாள சாக்கடைக்குள் விழுந்துவிட்டான். 2 ஆயிரத்து 125 கிலோமீற்றர் நீளமுள்ள இந்தப் பாதாள சாக்கடைக்குள் அவன அடித்துச் செல்லப்பட்டான்.

இந்தத் தகவல் கிடைத்ததும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். கிறிஸ்டோபர் விழுந்த இடத்திலிருந்து குத்து மதிப்பாக சிறு மிதவைப் படகை பாதாள சாக்கடைக்குள் இறக்கினார்கள். அந்த படகிலேயே வெகுதூரம் சென்று சிறுவனைத் தேடினார்கள். 5 மணி நேரத்திற்குப் பிறகு கிறிஸ்டோபர் ஒரு இடத்தில் உயிருக்குப் போராடிய நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்ததை மீட்புப் பணியாளர்கள் கண்டுபிடித்தனர். அவனை பத்திரமாக மீட்டு மேலே கொண்டுவந்தனர். தற்போது சிறுவன் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

"பாதாளச் சாக்கடைக்குள் 5 மணி நேரம் ஒருவர் உயிரோடு இருந்தது ஆச்சரியமான விஷயம்" என்று ஒட்டாவா நகரின் கழிவு நீக்[illegible] இயக்குநர் பாட்மேக் நல்லி கூறினார். (ம-9)

## நீண்ட நாள்கள் விண்ணில் பறந்து அமெரிக்க வீரர்கள் சாதனை!

கேப்கேனர்வல்,ஜூன்15

நீண்ட நாள்கள் விண்வெளியில் பறந்த அமெரிக்க வீரர்கள் என்ற சாதனையை கார்ல்வால்ஸ, டேனியல் பர்ஸ்ச் ஆகிய இருவரும் நிகழ்த்தியுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த டிசெம்பர் மாதம் வானவெளிக்குச் சென்றிருந்தனர். நான்கு மாதங்கள் மட்டும் வானவெளியில் தங்கியிருக்கத் திட்டமிடப்பட்டது. எனினும் இவர்கள் சர்வதேச விண்வெளி மைய கட்டுமானப் பணியில் ஈடுபட்டது நீடிக்கப்பட்டதனால் வானவெளியில் கூடுதல் நாள்கள் தங்கினார்கள்.

வால்ஸ், டேனியல் இருவரும் பூமிக்குத் திரும்பி வரவேண்டிய 'எண்டவர்' விண்வெளிக் கலம் செலுத்துவது தாமதமானதாலும் இவர்கள் வானவெளியில் தங்கவேண்டிய நாள்கள் அதிகரித்தன.

இதற்கு முன்பு 1996ஆம் ஆண்டு 'மிர்' விண்வெளிக் கலத்தில் அமெரிக்க வீரர் ஷானோன் லூசிட் சரியாக 6 மாதங்கள் தங்கியிருந்ததுதான் அமெரிக்க சாதனையாக இருந்தது. எனினும், ரஷ்ய விண்வெளி வீரர் வாலேரி பாலியகோவ் 1994 - 95ஆம் ஆண்டில் 438 நாள்கள் தொடர்ந்து வானவெளியில் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

### பாகிஸ்தானில் நேற்றுச் சம்பவம்

# அமெரிக்கத் தூதரகம் முன் குண்டு வெடித்து 8பேர் பலி!

## 'அல்கெய்டா'வே காரணமென சந்தேகம்

இஸ்லாமாபாத்,ஜூன்15

பாகிஸ்தானின் கராச்சி நகரில் அமெரிக்கத் துணைத் தூதரகத்துக்கு வெளியே நேற்றுக் காலை சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. 8 பேர் கொல்லப்பட்டனர்; 25பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒரு அமெரிக்கர் உட்பட துணை தூதரகப் பணியாளர்கள் 6பேர் அடங்கியிருந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்பினால் தூதரகத்தின் சுற்றுமதில் கடும் சேதமடைந்தது. தூதரகக் கட்டடத்தின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கிவிழுந்தன. அங்கே நிறுத்தப்பட்டிருந்த 5 கார்களும் சேதமடைந்தன. காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.


இது தற்கொலைப் படையினரின் தாக்குதலாக இருக்கலாம் என்று கூறிய பாகிஸ்தான் பொலீஸ் அதிகாரிகள், குண்டு காரில் வைக்கப்பட்டிருந்தது; ஆனால் அந்தக் கார் நிறுத்தப்பட்டிருந்ததா அல்லது ஓடிக்கொண்டிருந்ததா என்பது தெரியவில்லை என்றனர்.

அல்கெய்டா தீவிரவாதிகள் இந்த தாக்குதலுக்குக் காரணமாக இருக்கலாம் என்று பாகிஸ்தானியப் பொலீஸ் கூறுகின்றது.

சென்ற மாதமும் கராச்சி நகரில் 'ஷெரதான்' ஹோட்டலுக்கு வெளியே நடத்தப்பட்ட மனித குண்டுத் தாக்குதலில் 11 பிரெஞ்சு நாட்டவர்களும் 3 பாகிஸ்தானியர்களும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)



நேற்றைய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.



குண்டு வெடித்த தூதரகத்தின் முன்பாகம்

### எச்சரிக்கை

மறைந்து வாழும் அல்கெய்டா தீவிரவாதிகளை அழிப்பதற்கு உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் எச்சரித்துள்ளார். இத்தாக்குதலிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கான சட்டத்தில் அவர் கையெழுத்திட்டுள்ளார்.

# பாக். 'இறைவனின் தூதர்' சுட்டுக் கொல்லப்பட்டார்!

லாகூர்,ஜூன்15

'நாஸ்திகம' பேசிய கைதி, இன்னொரு கைதியினால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பாகிஸ்தானில் லாகூரில் இடம்பெற்றுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த நாஸ்திகவாதியான சுப் அலி (வயது 62) தன்னையே 'இறைவனின் தூதர்' என்று சொல்லிக் கொண்டார், இஸ்லாமிய மத நம்பிக்கையின்படி முஹமது நபியே இறைவனின் இறுதித் தூதர் ஆவார்.

இதனால் சுப் அலிக்கு இஸ்லாமிய சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனையை எதிர்த்து மேனமுறையீடு செய்த அலி தீர்ப்புக்காக சிறையில் காத்திருந்தார்.

இதற்கிடையில் லாகூர் கோடலாக்பத் சிறையில் உள்ள அறையிலிருந்து இன்னொரு அறைக்கு அவரை மாற்றியபோது அவர் இன்னொரு கைதியால் சுட்டுக்கொல்லப்பட்டார். (ஒ-9)

# ரங்கூனைவிட்டு முதற்றடவையாக வெளியேறிச் சென்றார் ஆங்ஷான்

ரங்கூன்,ஜூன்15

பர்மாவின் எதிர்கட்சித் தலைவியான ஆங்ஷான் சூகி வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் முதற்றடவையாக தலைநகர் ரங்கூனைவிட்டு நேற்று வெளியே சென்றுள்ளார்.

ரங்கூனின் தென்கிழக்காக உள்ள தமயன்யா மலைப் பகுதியில் இருக்கும் புத்தர் கோயிலுக்கு நேற்றுக் காலையில் சென்ற சூகி, இரு தினங்கள் அப்பகுதியில் தங்கியிருக்கத் திட்டமிட்டுள்ளார். தனது ஆதரவாளர் கூட்டம் எதனையும் தன்னுடன் அவர் அழைத்துச் செல்லவில்லை.

கடந்த 2000ஆம் ஆண்டில் சூகியை சுதந்திரமாக நடமாடவிடுவதாக இராணுவ அரசு அறிவித்திருந்தது. ஆனால், அப்போது அவர் ரங்கூனைவிட்டு வெளியேற முயன்றபோது பொலீஸாரால் தடுத்துநிறுத்தப்பட்டார். இதனை எதிர்த்து வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரிலேயே 9 நாள்கள் அடைந்து கிடந்து போராட்டம் நடத்தினார்.

இதன் பின்னர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட அவர், சுமார் 19 மாதங்களின் பின்னா, கடந்த மாத ஆரம்பத்தில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

எனவே, சூகியை சுதந்திரமாக நடமாட பர்மிய இராணுவ அரசு அனுமதிக்கின்றதா என்பதைச் சோதிக்கும் ஒரு நிகழ்வாகவும் அவரது நேற்றைய பயணம் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பர்மியப் பொலீஸாரோ அல்லது இராணுவத்தினரோ அவரது பயணத்துக்கு இடையூறு எதுவும் விளைவிக்கவில்லை. (ம)



தன் வீட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லும் ஆங்ஷான் சூகியை வழி அனுப்பி வைக்கும் அவரது ஆதரவாளர்கள்

உலக அரங்கில்

# அமெரிக்காவின் போர் விமானம் ஆப்கானில் வீழ்ந்து நொறுங்கியது!

## 3 படையினர் பலி; 7பேர் காயம்

வாஷிங்ரன்,ஜூன்15

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் போர் விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் மூன்று அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; 7பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் ஆப்கானிஸ்தானில் உள்ள 'பந்தே சர்தேடேம்' என்ற இடத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற அமெரிக்கப் போர் விமானத்தில் 10 இராணுவத்தினர் பயணம் செய்திருந்தனர். விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதினால் விமானம் தரையில் வீழ்ந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 3 இராணுவத்தினர் உடல் சிதறி அதே இடத்தில் பலியானார்கள். ஏனைய 7பேரும் காயம் அடைந்த நிலையில் கந்தகார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விமான விபத்துக் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் -

விமானம் சுடப்பட்டதால் வீழ்ந்து நொறுங்கவில்லை எனவும் - அமெரிக்க இராணுவத் தலைமை அலுவலகமான பென்டகன் தெரிவித்தது. (ம-9)

### படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள

# சுழிபுரம், பொன்னாலை பகுதிகளில் சிக்கியுள்ள கால்நடைகளை மீட்டுவர அனுமதி தாருங்கள்

## வலி.மேற்கு விவசாய சம்மேளனங்கள் கூட்டாகக் கோரிக்கை

வலிகாமம்மேற்கு,ஜூன்15

சுழிபுரம், பொன்னாலை மற்றும் மூளாய் ஆகிய பிரதேசங்களில் தொடர்ந்தும் படையினரின் கட்டுப்பாட்டினுள் உள்ள பகுதிகளில் சிக்கியுள்ள கால் நடைகளை பிடித்து வர அனுமதி வழங்குமாறு கோரி மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச விவசாய சம்மேளனங்கள் தமது பிரதேச செயலர் ஊடாக பொன்னாலை கடற்படை பொறுப்பதிகாரிக்கு இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளன. அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.மேற்கு பிரதேச மக்களாகிய நாம் விவசாயத்தையே எமது பிரதான தொழிலாக மேற்கொள்கின்றோம். விவசாயமும் கால்நடை வளர்ப்பும் இணைந்த ஒன்றிணைந்த முறையைக் கைக்கொள்ளும் எமக்கு கால்நடைகள் அவசியமானதொன்றாகும். கால்நடைகள் மூலம் நாம் நிறை உணவுத் தேவையில் (பால், இறைச்சி) ஒரு பகுதியைப் பூர்த்தி செய்வதுடன், விவசாயத்தேவை (பசளை, சூடடித்தல்), போக்குவரத்துத்தேவை என பல வழிகளில் பயன் பெற்றுக்கொண்டோம்.

1992ஆம் ஆண்டு, 1995ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் எமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இதன்போது எமது உயிரையே பாதுகாக்க முடியாத நிலையில் இருந்த நாம் எமது ஜீவனோபாயத்து ஆதாரமாக இருந்த கால்நடைகளை மிகவும் துயரத்துடன் கைவிட்டு செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீளக்குடியமர நாம் எமது பிரதேசத்துள் காலடி எடுத்து வைத்த போது, எம்மால் கைவிடப்பட்டு சென்ற ஆயிரக்கணக்கான கால்நடைகள் பொன்னாலை, மூளாய், சுழிபுரம் பகுதிகளில் உள்ள காட்டுப் பகுதியில் காணப்பட்டன. இப்பிரதேசமானது கடற்படையினரின் பாதுகாப்புப் பிரதேசமாகக் காணப்படுவதனால், எம்மால் அப்பகுதியினுள் காணப்படும் கால்நடைகளை எமது பகுதிகளுக்குக் கொண்டுவர முடியவில்லை.

எமது சொத்தாகிய கால்நடைகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியினுள் காணப்படுவதனால் நாம் அன்றாட விவசாயச் செய்கையில் பெரும் பின்னடைவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். தற்பொழுது ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை ஏற்றத்தினால், வறிய விவசாயிகளாகிய நாம் இயந்திர வலுவைப் பாவிக்க முடியாதுள்ளது. அதனால் முன்பு நம்மால் இயந்திர வலுவிற்கு மாற்றீடாகப் பயன்படுத்திய கால்நடைகளையும் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று இயற்கை பசளைப் பயன்பாடு அதிகரித்துள்ள நேரத்தில் எம்மால் பசளை தேவையைக்கூட பூர்த்திசெய்யமுடியவில்லை. விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டது மட்டுமன்றி சிறார்கள் நிறையுணவாகிய பால் இன்மையால் போஷாக்கு குறைபாட்டுடன் காணப்படுகின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் காணப்படும் எமது கால்நடைகள் இரவு வேளைகளில் கூட்டமாக வந்து காலபோக, சிறுபோக பயிர்களை அழித்துச் செல்கின்றன. இப்பயிரழிவானது விவசாயச் செய்கையில் பாரிய பின்னடைவை ஏற்படுத்துவதுடன், எம்மால் தொடர்ந்து மேற்கொள்ளும் விவசாய செய்கையையும் கேள்விக் குறியாக்குகின்றது. அத்துடன் பாதுகாப்புக் காரணங்களால் எம்மால் இரவுவேளையில் அழிவை ஏற்படுத்தும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

எம்மால் கைவிடப்பட்டுச் சென்ற கால்நடைகளை இழந்து நிற்பதுடன், அவை விவசாயத்தையும் (பயிர்களையும்) அழிக்கின்றன. எனவே இக் கால்நடைகளை நாம் எமது வதிவிடப் பிரதேசத்தினுள் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி தருமாறு வேண்டுகின்றோம் -

என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-175)


### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### "போறணை வாஸ் பதவிக்கு விண்ணப்பம் கோரல்" (தற்காலிகம்)

எமது சங்கத்தின் கொட்டைக்காடு வெதுப்பகத்துக்கு அனுபவமுள்ள போறணை வாஸ் தேவைப்படுகின்றார்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை 30.06.2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் 'பொதுமுகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை' என்ற முகவரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

*வேதனம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.*

(சி-22525) **பொது முகாமையாளர்.**


## 31ஆவது நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 27 - 01 - 1937



ஆண்டவர் அடியில் 17 - 05 - 2002

### இராயப்பு அந்தோனிப்பிள்ளை

உன் முகத்து ஒளியினிலே
நாங்கள் முகம் மலர்ந்து வீற்றிருந்த
கலகலப்பு வாழ்க்கையெல்லாம்
கனவாகிப் போனதையா!
கொழுந்துவிட்ட மெழுகுபோல - நாம்
உருகி நிற்க எம்மையெல்லாம் பிரிய
மனமின்றிப் பிரிந்தாயோ?

இவரது ஆன்மசாந்திக்காக யாழ்.அருள் ஆச்சிரமத்தில் இன்று (15.06.2002) சனிக்கிழமை காலை 6.30 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
*யாழ்ப்பாணம்.* (4865) பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### சிவானந்தம் மதிமுகன்

எழுதுமட்டுவாழ் தெற்கை நிரந்தர வதிவிடமாகவும் மருதடி, பருத்தித்துறையைத் தற்காலிக வதிவிடமாவும் கொண்ட சிவானந்தம் - நவமணிதேவி (உப அஞ்சல் அதிபர், எழுதுமட்டுவாழ்) தம்பதிகளின் அன்பு மகனும் சாம்பகியின் அன்புச் சகோதரனுமாகிய மதிமுகன் (பளை மத்திய கல்லூரி - முதலாம் ஆண்டு மாணவன்) அவர்கள் 13.06.2002 வியாழக்கிழமை இரவு கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற க.குலசேகரம்பிள்ளை மற்றும் நாகம்மா மற்றும் அ.துரைசிங்கம், சின்னம்மா தம்பதிகளின் பேரனும் சிவராஜா (கனடா), சிவரத்தினம், சிவாகரன் (கனடா), சிவரூபன் (சுவிஸ்), சுபத்திராதேவி, கெங்காதேவி ஆகியோரின் பெறாமகனும் சிவபாக்கியம், அன்னலட்சுமி, இந்திராணி, சிவராணி மற்றும் நடராஜலிங்கம், சிவயோகலிங்கம், சித்திவிநாயகலிங்கம் (அபுதாபி), திருக்குமாரலிங்கம், கிருஷ்ணானந்தலிங்கம், அருட்சோதிலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகலளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*பிரதான வீதி (இ.போ.ச.டிப்போ அருகில்),*
*மருதடி, பருத்தித்துறை.*

தகவல்:
கு.சிவானந்தம் (வரன்)
*"லிங்கநேய",*
*எழுதுமட்டுவாழ் தெற்கு.*

(4873)

## நூல் கண்காட்சி

சுழிபுரம்,ஜூன்15

சுழிபுரத்தைச் சேர்ந்த அமரர் யோகி கா.கார்த்திகேசுவின் ஆக்கங்கள் தொடர்பான நூற் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்தமாத இறுதியில் சம்பு நாதேஸ்வர அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ள இக்கண்காட்சியில் யோகியர் உரையெழுதிய நூல்கள், யோகியர் சம்பந்தமான நூல்கள், கட்டுரைகள், யோகியர் தொடர்பான புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளதுடன், உரை நூல் விற்பனையும் இடம்பெறவுள்ளது. (எ-13-28)

## ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூன்15

ஆலய மூலஸ்தான கூரையை பிரித்து உள் நுழைந்த திருடர்கள் சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான ஆபரணங்களைச் சூறையாடிச் சென்றுள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி நல்லூர் தெற்கு, கற்பக விநாயகர் ஆலயத்திலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் ஆபரணங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டகம் உடைக்கப்பட்டுள்ளது. (எ-13-180)

## கௌரவிப்பு

சுழிபுரம்,ஜூன்15

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய குருவான சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்களின் புதல்வன் ஸ்ரீ ரங்கன் சர்மாவிற்கு 'சாதக இளவரசு' என்னும் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையினரின் ஏற்பாட்டில் தொல்புரம் ஆதி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தினர் இந்தப் பட்டத்தை வழங்கினர். (எ-13-25)

# பனை அழிப்புக்கு எதிராக 28ஆம் திகதி பெரும் பேரணி

### ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

பனைவள அழிப்புக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி எதிர்வரும் 28ஆம் திகதி அளவில் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு பொது அமைப்புக்களையும் ஒன்று திரட்டி யாழ்குடாநாடு முழுவதுமாக இந்தப் பேரணியை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், பனை அபிவிருத்திச் சபையும் ஈடுபட்டு வருகின்றன.

இந்தக் கண்டனப் பேரணி தொடாபாக பல்வேறுபட்ட தரப்பினருடனான கலந்துரையாடல் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

பனை அழிப்பை உடனடியாக நிறுத்தக்கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஏற்கனவே மகஜர் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி)

## விரைவில் புனரமைப்பு வேலைகள்

சுழிபுரம்,ஜூன்15

சுழிபுரம் திருவடி நிலை ஞான வைரவர் ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரைவில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, கட்டட வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-13-28)

## குடிசை எரிந்து நாசம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

சங்கானை கிழக்கு, தோப்பு இடம்பெயர்ந்தோர் முகாமில் குடிசை ஒன்று தற்செயலாக தீப்பிடித்து முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

நவக்கிரி, பன்னாலையில் இருந்து இடம்பெயர்ந்து தோப்பு முகாமில் வசித்து வந்த சு.வசந்தகுமார் என்பவரின் குடிசையே இவ்வாறு முற்றாக எரிந்துள்ளது.

இதனால் குடிசையினுள் இருந்த சமையல் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் உடுபுடைவைகள், அடையாள அட்டைகள், பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள் உட்பட சகல பொருள்களும் எரிந்துவிட்டன எனக் கூறப்பட்டது. (எ-175)


## மாநகரசபை, யாழ்ப்பாணம்

### கட்டட நிர்மாண, வீதி வேலை அமைப்புக்குத் தேவையான மூலப்பொருள் வழங்குநர்களைக் கோருதல் - 2002

**2002ஆம் ஆண்டுக்கான மாநகர வேலைத் திட்டங்களுக்குத் தேவையான கீழ்க்காணும் பொருள்களை விரைவாக மாநகரசபைக் களஞ்சியத்திற்கு வழங்குவதற்கு தகுதியானவர்களை 26.06.2002ஆம் திகதி வரையில் எம்மால் வழங்கும் விண்ணபத்தில் பூரணப்படுத்தி வழங்குநர்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.**

1. 1/2", 3/4", 1", 1 1/2", 2", 4" அளவுகொண்ட கிறசர் சல்லியும், 6"x9", 12"x18" கற்கள்.
2. வரணி, நாகர்கோயில் மணல், அரியாலை மணல், ஊரி மணல், வேறும் தரமான பல பொதுத் தேவைக்கான மண் வழங்கல்.
3. நீர் வழங்கலைக் கணிப்பிடும் மானி (மீற்றர்) 1/2" அளவு நீர் வெளியேற்றும் மானி வழங்கக்கூடியவர்கள் மாநகரசபைக்கு விண்ணப்பிக்கலாம்.

*குறிப்பு:* வழங்குநர்கள் மாநகர எல்லைக்குள் நிரந்தர, தற்காலிக வதிவிடம் இருத்தல் மிக அவசியமாகக் கருதப்படும்.

*மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்*

**மாநகர ஆணையாளர்.**

(C/22522)

### ஆலோசனையும் உதவியும் பெற.......

**வெளிநாட்டு விசா விண்ணப்பங்கள் தயாரித்தல், வெளிநாடுகள் செல்லும்/வெளிநாடுகளிலிருந்து வரும் நபர்கள், குடும்பங்களுக்குப் பிரயாண ஒழுங்குகள், தங்குமிட வசதிகள், வாகன வசதிகள் முதலியன சம்பந்தமான ஆலோசனைகள், உதவிகளுக்கு உடன் தொடர்புகொள்ளவும்.**

**S.செல்வராசா,**
**559789**
**255H, காலி வீதி (மார்க்கெட் அருகில்),**
**வெள்ளவத்தை, கொழும்பு - 06**

(C/22523)

### மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி

புத்தூர் கிழக்கு, சரஸ்வதி வீதி, வைரவர் கோயில் கட்டட வளர்ச்சி திருப்பணி நிதிக்காக மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி ஒன்று நடத்தப்படுகின்றது.

*நாள்* : நாளை (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை.
*நேரம்* : பிற்பகல் 2.00 மணி.
*இடம்* : நீர்வேலி சாவரித் திடல்.
*பிரவேசம்* : ரூபா 10 மட்டும்.

*வைரவர் கோயில்,*
*புத்தூர் கிழக்கு.* (C/22524)

**ஆலய பரிபாலன சபை.**

### இறுதி வருட முகாமைத்துவ மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

**அனைத்து முகாமைத்துவ இறுதி வருட மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் (17.06.2002) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் குழுப்புகைப்படம் எடுப்பதற்காக உரிய ஆயத்தங்களுடன் பல்கலைக்கழக வளாகத்திற்குச் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

**முகாமைத்துவ மாணவர் மன்றம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(4872)

உதயன்

## தமிழ்த் தலைவர்களின் இன்றைய பொறுப்பு

சிங்கள மக்களில் பெரும்பாலானோர் சமாதானத்தை விரும்புகிறார்கள்; சமாதான முயற்சிகளை வரவேற்கிறார்கள். அதேவேளை, சுயநல அரசியல்வாதிகளும், பேரினவாதக் கட்சிகளும், சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் செய்து வரும் பொய்ப்பிரசாரங்களால் சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் மட்டும் குழம்பிப்போயிருக்கின்றார்கள் என்பதை நேற்று இந்தப் பத்தியில் கண்டோம்.

குழம்பிப்போயிருக்கும் இந்த மக்களுக்கும், இவர்களைக் குழப்பியவர்களுக்கும் தெளிவை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு சமாதான விரும்பிகள் அனைவருக்கும் உண்டு. அவர்களிலும் தமிழ்மக்களுக்கு அந்தப் பொறுப்பு மிக அதிகம்.

அவர்கள் என்ன செய்யலாம்?

ஏட்டிக்குப் போட்டியாக எதிர்ப்புக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்திப் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்க முயற்சி செய்யலாம். இந்த நடவடிக்கைகளை முன்னின்று மேற்கொண்டு, தமிழ்மக்களை அவற்றில் பங்களிப்புச்செய்ய வைக்க வேண்டியவர்கள் தமிழ் அரசியல்வாதிகள் ஆவர்.

சமீபத்தில் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.பிக்கள் குழு ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியபோது எம்.பிக்கள் தாம் இதைச் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இது ஒருமுனை நடவடிக்கை. அடுத்த முனை நடவடிக்கையாகச் சிங்களப் பொதுமக்களை தமிழ்மக்கள் தமது நிகழ்ச்சித்திட்டங்களுடன் நேரடியாக அணுகவேண்டும்.

இன்றைய யுத்தநிறுத்த சூழ்நிலையில் வடக்கு - கிழக்குக்கு சிங்கள மக்கள் பெரும் எண்ணிக்கையில் வருகிறார்கள். அவர்களுக்கு ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை எடுத்துவிளக்கும் வகையிலான தெருக்கூத்துக்களை நடத்திக் காட்டலாம். உரைகளை நிகழ்த்தலாம். வேறுவழிகளிலும் பிரசாரங்களை மேற்கொள்ளலாம்.

வடக்கு - கிழக்கிற்கு வரும் சிங்கள மக்களுக்கு விளங்கும் வகையில் எல்லாவற்றையும் சிங்களத்தில் நடத்துவது நல்ல பயன் தரும்.

இத்தகைய சிங்களமொழி மூலமான தெருக்கூத்துக்களையும், பிரசாரங்களையும் வடக்கு - கிழக்குக்கு வரும் சிங்களவர்களுக்கும் மட்டும் என்று மட்டுப்படுத்தக்கூடாது. வடக்கு - கிழக்கிற்கு வெளியே உள்ள தென் பகுதிச் சிங்களவர்களுக்கும் நமது நிலையை விளக்கத் தக்கவகையில் தென்னிலங்கையிலும் எல்லாவற்றையும் நடத்தவேண்டும்.

அத்தகைய பணியைச் செய்வதில் சில ஆபத்துக்கள் இருக்கக்கூடும் என்றாலும் எமது மக்களின் பக்கத்துக் கருத்துக்களை உரிய முறையில் சிங்கள மக்களுக்கு எடுத்துரைப்பதும் அதை அவர்கள் செவிமடுப்பதும் இன்றைய அரசியற் சூழ்நிலையில் மிகவும் அவசியமான பணியாகும்.

ஏற்கனவே 'புலிகளின் குரல்' வானொலி தனது சேவையை சிங்களமொழிக்கு விஸ்தரித்திருக்கின்றது என்றாலும் அந்நிகழ்ச்சி வவுனியாவிற்கு அப்பால் ஒலிபரப்பப்படுவதில் சிக்கல் இருக்கிறது.

எமது அமைதி முயற்சியை சிங்களத் தீவிரவாதிகள் குழப்புவதற்கு எதிராக நாம் கிளர்ந்தெழுவதற்கு முன்னர், சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் தவறாக வழிநடத்தப்படுவதில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டிய பணியைச் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதனை நாம் ஒழுங்குமுறை தவறாது செய்துமுடிப்போமா?

நமது மக்களின் அரசியற் தலைவர்கள் தமக்குத் தாமே கேள்வி எழுப்பி, திட்டம் வகுத்துச் செயற்பட வேண்டிய விடயம் இது. வழிகாட்ட வேண்டியவர்கள் அவர்கள், செய்வார்களா?

# தென்னிந்தியா - இலங்கை இடையே பொருளாதார ரீதியிலான இணைப்பு!

## ரணிலுடனான சந்திப்பில் இதுகுறித்து ஜெயா மகிழ்ச்சி

சென்னை,ஜூன்15

தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்களைப் பொருளாதார ரீதியில் இலங்கையுடன் இணைத்துக்கொள்வதற்கு இந்தியாவும் இலங்கையும் இணக்கம் கண்டுள்ளன. இந்தத் திட்டம் குறித்து பிரதமர் ரணிலைச் சந்தித்துப் பேசிய சமயம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நாடுகடத்துவது குறித்து பிரதமர் ரணிலிடம் மூச்சுக்கூடக் காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதுடில்லியிலிருந்து தமிழ்நாடு வந்ததும் சென்னையில் தமிழக ஆளுநர் மாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஜெயலலிதாவைப் பிரதமர் ரணில் சந்தித்துப் பேசினார்.

அப்போதே தென்னிந்திய மானிலங்களுடன் இலங்கையை இணைப்பது குறித்து ஜெயலலிதா மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவித்தார்.

இரு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்காக இரண்டாவது சுதந்திர வர்த்தகக் கூட்டு உடன்படிக்கை செய்துகொள்ளப்படவிருக்கிறது. அந்த உடன்படிக்கையின் செயற்பாட்டுக்காகவே இந்தியாவின் தென் மானிலங்களையும் இலங்கையையும் இணைப்பதென்று புதுடில்லியில் இணக்கம் காணப்பட்டது.

இணைப்புக்கு முழு ஒத்துழைப்பு வழங்கத் தான் தயாராக இருப்பதாக ஜெயலலிதா சொன்னார். தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் பற்றியும் ஜெயலலிதா குறிப்பிட்டார்.

தற்பொழுது இந்தியாவில் தங்கி இருக்கும் இலங்கை அகதிகள் மீண்டும் இலங்கை திரும்ப விரும்பம் தெரிவித்துள்ளனர். சிறு எண்ணிக்கையினர் திரும்பிச் சென்றும் உள்ளனர் என ஜெயலலிதா கூறினார்.

அகதிகள் மீள்குடியமர்வு தொடர்பாக இலங்கை அரசு தனியான அமைச்சு ஒன்றை உருவாக்கியுள்ளது என்று பிரதமர் சொன்னார். இதற்குப் பொறுப்பான அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அடுத்த வாரம் தமிழகம் வந்து அரச அதிகாரிகளையும் அமைச்சர்களையும் சந்தித்து இது குறித்துப் பேசுவார் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை தலைமன்னாருக்கும் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்துக்கும் இடையே தரைப்பாலம் அமைப்பது பற்றியும் இருவரும் கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

பாலம் அமைப்பது நல்லகாரியம் என்று கூறி அதை வரவேற்றார் ஜெயலலிதா. இலங்கையில் விவசாய அபிவிருத்தி தொடர்பாக டாக்டர் சுவாமிநாதன் தயாரித்த ஆய்வறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதல்வர் ஜெயலலிதாவிடம் கையளித்தார்.

இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க ஜெயலலிதா உறுதியளித்தார்.

இச்சந்திப்பின்போது ஜெயலலிதா பிரபாகரனைக் கைதுசெய்து, இந்தியாவுக்கு நாடுகடத்தும் விடயத்தைக் கிளப்புவார் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், விஷயம் குழம்பிவிடலாம் என்று அச்சம் அடைந்திருந்தனர். ஆனால், ஜெயலலிதா அதைப்பற்றி ஒன்றும் பேசவில்லை.

இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றிபெறவேண்டும்; இச்சமாதானம் விரைவில் மலரவேண்டும் என்றும் அவர் விருபபம் தெரிவித்தார். பல விடயங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்தார். இதுகுறித்து பிரதமர் ரணில் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்தார். (ம)

### விடுதலைப் புலிகள் மீதான

## தடையை அரசு நீக்கினால் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

### விமல் வீரவன்ஸ எச்சரிக்கை

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கினால் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம்.

- இவ்வாறு கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் எச்சரிக்கை விடுத்துள்ளார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் பதினொரு கப்பல்களில் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்திருப்பதாகவும், ஆயுத மற்றும் போர் நிலைகளில் புலிகள் தம்மை நிலைப்படுத்தியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட சில பிரதேசங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த புலிகள் இன்று வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளிலும் அரசியல் ரீதியாகத் தம்மை நிலைப்படுத்தியுள்ளனர்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ-13-10)

### ஏ-9 திறக்கப்பட்டதை அடுத்து

## வட்டு., அராலிப் பகுதிகளில் 300 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

வலி.மேற்கு,ஜூன்15

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் சுமார் 300 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து வன்னிப் பகுதிகளிலும், தென்னிலங்கையில் இருந்தும் சுமார் 300 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி ஆகிய இடங்களிலேயே அதிகமான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு அல்லாத பாடசாலை உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் ஆகியவற்றை மிக விரைவில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (எ-175)

### சங்கானைக் கல்விக் கோட்டத்தில்

## மெல்லக் கற்கும் மாணவருக்கு மாலை நேர வகுப்புக்கள்

வலிமேற்கு,ஜூன்15

மூளாயிலுள்ள சிறுவர் கல்விக்கும் பாலர் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் சங்கானைக் கல்விக் கோட்டத்திலுள்ள 10 பாடசாலைகளில் பின்தங்கிய மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புக்களை நடத்துகின்றது.

மெல்லக் கற்கும் மாணவர்கள் பாடசாலை அதிபர்களினால் இனங்காணப்படுகின்றனர்.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, சுளிபுரம் காட்டுப்புலம் அ.மி.த.க.பாடசாலை, பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாலயம், சுளிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை, அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை, அராலி இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இவ்வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களினால் பி.ப.2.30 மணி தொடக்கம் 4 மணிவரை வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. (ஐ-173)

**நாளை**

ஆனி 2
ஞாயிற்றுக்கிழமை
(16.06.2002)
திதி : ஷஷ்டி
முன்னிரவு 9.36 வரை.
நட்சத்திரம்: மகம்
முன்னிரவு 9.35 வரை.
மரணயோகம்
சுபநேரம் : 8.53 - 10.23
ராகுகாலம் : 4.23 - 5.53
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

எந்த மனிதன் வெற்றி கொள்ள விரும்புகிறானோ அவனுக்குத் தனது இதயத்தையும் எண்ணங்களையும் மறைத்து வைக்கும் ஆற்றல் வேண்டும்.

## தீவகத்தில் பணியாற்றிய ஆசிரியர்க்கு இடமாற்றம்

தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களில் யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இடமாற்றம் பெற்றோர் பெயர், கடமையாற்றிய பாடசாலை, மாற்றம பெற்ற கல்விவலயம் போன்றவற்றின் விவரங்கள் வருமாறு:-

திருமதி தெ.சௌந்தரராஜன்(அனலைதீவு சதாசிவ வித்தியாலயம்) வலிகாமம் கல்வி வலயத்துக்கும், திருமதி வ.ஒளிவண்ணன்(வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்), சோ.சற்குணநாதன்(வேலணை மேற்கு நடராச வித்தியாலயம்), இ.தர்மரட்ணம்(நெடுந்தீவு மகாவித்தியாலயம்), திருமதி க.சரவணபவானந்தமூர்த்தி(வேலணை மேற்கு நடராச வித்தியாலயம்), திருமதி கு.தர்மகுலராணி(நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம்), செ.சுகேந்திரன்(சேர்.வைத்திலிங்க துரைசுவாமி மகா வித்தியாலயம்), பொ.ஆறுமுகம்(தீவக வலய முதன்மை ஆசிரியர்) ஆகியோர் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கான இடமாற்ற உத்தரவுக் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் - உடனடியாக தத் தமது கல்விப் பணிப்பாளர்களை சந்தித்து தமக்குரிய பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா தெரிவித்துள்ளார். (எ-13-ரி)

### வெள்ளிவிழாவை முன்னிட்டு

## திருமலை விவேகானந்தா 'மாணவர் பேரணி' நடத்தும்

திருகோணமலை,ஜூன்15

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி மாணவர்கள் கல்லூரியின் வெள்ளிவிழாவை முன்னிட்டு 'மாணவர் பேரணி' ஒன்றை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 19ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இப்பேரணியில், கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர் உட்படப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நகரவீதிகள் தோறும் செல்லும் இந்த மாணவர் அணியினர் நான்கு பிரிவுகளாகப் பிரிந்து சென்று கல்லூரியின் சாதனைகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பாகப் பிரசாரம்செய்வர். அத்துடன் நூலக அபிவிருத்தி, கணனிக்கல்வி, திறந்தவெளியரங்கு, தளபாடங்கள், வகுப்பறைத் திருத்தம், ஆசிரியர் அறை அபிவிருத்தி போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்டு நிதிசேகரிக்கும் நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபடுவர். (எ-9)




போரூட் நிறுவனத்தின் ஒளி அமைப்பினால் நடத்தப்பட்ட சிறுவர் நல்லொழுக்கப் பயிற்சி முகாம் அண்மையில் கரணவாய் செல்வாபுரம் இளங்கோ சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்வினை போரூட் நிறுவனத்தின் யாழ்.திட்ட இணைப்பாளர் எஸ்.கோகுலதாஸ் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்திற் காணலாம். நிலையத்தின் தலைவர் எஸ்.மகாலிங்கம், நிலைய ஐக்கிய நாணய சங்கப் பொறுப்பாளர் செலவி சுமதி ஆகியோரும் படத்திற் காணப்படுகின்றனர். (எ-11)

PX டி. வீ. அன்டெனா பூஸ்டர்

மாதிரி ஏ-4000
உயர் சக்தி யூஎச் எப் வீஎச்எப்
கலர் டீவீ பூஸ்டர்




- உயர் கேன் 35 db
- உயர் சக்தி 115 db- அதிக உற்பத்தியளவு
- சுப்பர் குறைந்த ஓசை - உயர் உணர்வூட்டியது
- உள்ளடங்கிய உள்நோக்கும் சிலெக்டர் - யூஎச்எப் / வீ எச்எப்
- சுதந்திரமான உள்நோக்கும் அல்லது யூஎச்எப் / வீ எச் எப் கலந்து வெளிநோக்கும்

TV சென்டர்
4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி : 434742

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது



## மாபெரும் சலுகை விற்பனை (2002)

காலம் : 14.06.2002 தொடக்கம் - 18.06.2002 வரை.
(ஞாயிறு 10.00 தொடக்கம் 2.00 மணிவரை)

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

இடம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(4823)


வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்

இச்சபையினால் 2002.06.12ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நடைபெறவிருந்த ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணத்தினால் 20.06.2002 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
13.06.2002.

திரு வே. மகேந்திரன்
உபதலைவர்

(C/22517)

உ
ஸ்ரீ ராமஜெயம்

யாழ்.வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## கீர்த்தனைகள் நூல் வெளியீடும் தெய்வீக இசை ஆராதனையும்

*இடம்:* மேற்படி தேவஸ்தான மண்டபம்
*காலம்:* சித்திரபானு வருஷம் ஆனித்திங்கள் 02ஆம் நாள் 16.06.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி

*தலைமை:* *முத்தமிழ் குருமணி பிரம்மஸ்ரீ*
நா.சர்வேஸ்வரக் குருக்கள்
*(கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)*

இணுவையூர் மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்களால் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் மீது பாடப்பட்ட **"கீர்த்தனைகள்"** நூல வெளியீடும் தொடர்ந்து தெய்வீக இசை ஆராதனையும் இடம்பெறும்.

தெய்வீக இசை ஆராதனை

*குரலிசை வழங்குபவர்:* இசைச்செல்வா ஸ்ரீ தர்ஷனன் *(இசைவிரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்.)*
*வயலின்:* வித்துவான் அ. ஜெயராமன்
*மிருதங்கம்:* திரு. சி. மகேந்திரன் *(மிருதங்க விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)*

அனைவரையும் இந்நிகழ்வில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(4796)
மேற்படி ஆதீன மஹாசபை.

# மரண அறிவித்தல்

## முத்தையா சின்னப்பிள்ளை (பொன்னு)

நுணாவில் மேற்கு, 190ஆம் கட்டையை வசிப்பிடமாகக் கொண்ட முத்தையா சின்னப்பிள்ளை (பொன்னு) நேற்று (14.06.2002) வெள்ளிக் கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் புஸ்பராணி (நுணாவில்), காலஞ்சென்ற தேவி மற்றும் பாலகிருஸ்ணன் (நுணாவில்), லீலாவதி (நுணாவில்), திலகவதி (நோர்வே), சிவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராசா மற்றும் சிவப்பிரகாசம் (கரவெட்டி), தனலட்சுமி, கந்தசாமி, சண்முகநாதன் (நோர்வே), பிருஷ்கா (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2002) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*190ஆம் கட்டை,*
*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.* (4846)

தகவல்:
க.கந்தசாமி *(மருமகன்).*

## நாடக அனுபவப் பகிர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்15

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், கலாபூஷணம், கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை தனது நாடக அனுபவங்களை பகிரவுள்ள நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-ரி)

## 'ஒதெல்லோ' நாடகம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ். திருமறைக் கலாமன்றத்தினரின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45மணிக்கு மன்ற அரங்கில் ஒதெல்லோ (Othello) என்ற நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

காதல், வெறுப்பு, பொறாமை போன்ற உணர்ச்சிகளிடையே உருவாகும் முரண்பாடுகளை அடிப்படையாக வைத்து ஷேக்ஸ்பியரால் எழுத்துருவாக்கப்பட்ட இந்த நாடகம் திருமறைக்கலாமன்ற கலைஞர்களின் நடிப்பில் மேடையேறுகிறது. (ஒ-6)

## பட்டம் வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்15

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி செ.அழகரத்தினம் 'வித்தியா சிரோன்மணி' பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.


இந்நிகழ்வு வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி தமிழ்ச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா தேசிய பீடாதிபதி செ. அழகரத்தினம் எழுதிய 'சுவாமி விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகளும் தொண்டுகளும்' என்னும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது.

இவ்விழாவில் யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும், கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்.

தமிழ்மணி அகளங்கள் நூலுக்கான ஆய்வுரையையும், வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் க.தங்கராஜா வாழ்த்துரையையும் வழங்கினர்.

பீடாதிபதிக்கு அறிஞர்கள், பெரியார்கள் எனப் பலரும் மலர்மாலை அணிவித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். (எ-ரி)




சர்வதேச நூல் தினத்தையொட்டி இடம்பெற்ற நிகழ்வில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவருமான திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் ஒரு தொகுதி நூல்களைச் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியப் பிரதிநிதியிடம் கையளிப்பதைப் படத்திற் காணலாம்.

*(படம்:- வலி.வடக்குச் செய்தியாளர்)*

## முதலாவது பிறந்ததின வாழ்த்து




## செல்வி லோகநாதன் சந்தியா

*திருநெல்வேலி கிழக்கு, நல்லூர், அரச வீதியைச் சேர்ந்த*
**லோகநாதன் - ஜெயந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி சந்தியா** இன்று (15.06.2002) சனிக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை லண்டனில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா (லண்டன்), அப்பம்மா, மாமாமார், மாமிமார் (திருநேல்வேலி கிழக்கு), அம்மப்பா, அம்மம்மா, Dr.சந்திரன் மாமா (நல்லூர்), பண்டிதர் இராசையா, பொன்னம்மா, பூட்டன், பூட்டிகுடும்பம் (ஆஸ்திரேலியா), ராஜ்மோகன் மாமா, மேகலா மாமி, மச்சான் (ஆஸ்திரேலியா), ஜெகன் மாமா, வசுந்தரா மாமி, மச்சான், மச்சாள் (கனடா), பாட்டன் கனகசபாபதி, பாட்டி பவளம்மா குடும்பம் (கனடா), பாட்டி மாணிக்கம் குடும்பம், பாட்டன் நடராசா, பாட்டி சரஸ்வதி குடும்பம் (லண்டன்) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லூர் முருகன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*அரச வீதி,*
*நல்லூர்.* (4841)

தகவல்:
Dr.பொ.கனகலிங்கம்,
இந்திராதேவி குடும்பத்தினர்.


LG இதோ.... வந்துவிட்டது! LG

உலகப் புகழ்பெற்ற
L.G. ஸ்தாபனத்தாரின் இலத்திரனியல் பொருள்கள்
தற்பொழுது யாழ்ப்பாணத்தில்...!

L.G. குளிர்சாதனப் பெட்டிகள் (REFRIGERATOR) SINGLE DOOR / DOUBLE DOOR
BOTTLE COOLER
CHEST (DEEP) FREEZER
L.G. சலவை இயந்திரம் (WASHING MACHINE)
L.G. குளிரூட்டி AIR CONDITIONER
L.G. COLOUR T.V. 20", 21"
L.G. FLATRON COLOUR T.V. 21"
L.G. MICROWAVE OVEN

மற்றும்
மின்விசிறிகள், மின்அலங்கார விளக்குகள், கிறைண்டர்
முதலான அனைத்து மின் உபகரணங்களுக்கும்
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்:

JAFFNA ELECTRICALS
யாழ்ப்பாண மின்னகம்

*06(94), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* T.P.2353

ABANS LTD. இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

(C-22489)

| | | | |
|---|---|---|---|
| | | புக. ரா. சனி | சூ. செ. வி. |
| | இராசிச் சக்கரம் | | வெ. |
| | | | சந். |
| | கே. | | |

# இந்த வார இராசி பலன்

## 16.06.2002 - 22.06.2002

*மாற்றம்:*

**16.06.2002 இல் மகம் - சிங்கம் ராசியில் நிற்கும்.**

**அரசியல்வாதிகளிடையே கருத்து வேற்றுமை, உண்மையற்ற போக்கு கொடுக்கும். பேச்சு தொடங்குவது போன்ற மாயை, மறைமுக அழுத்தங்கள், வெளிநாடுகள் உஷார் நிலை, இந்தியாவின வடக்கே இடைக்கிடை சண்டை, தெற்கே அரசியல் சூழ்ச்சி, கருத்துவேற்றுமை கொடுக்கும். மத்திய கிழக்கில் அழிவுகள், மேற்குலகம் புதிய திட்டங்களை கிழக்கு - மத்திய கிழக்கில் நடைமுறைப்படுத்தும். பசுபிக் - இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் வன்செயல்கள் அதிகரிக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.**

### மேடம்

புரிந்தவர்களுக்கு புரிந்துணர்வை பதிய வைக்கவேண்டும் என எண்ண லாகாது. அதனால் ஆபத்தும் கூட. தொழில்ஸ்தானத்தில் தொழிலின் அனுபவம் தொழில் செய்பவர்களுக்குத் தான் விளங்கும். ஓடிஓடித் தேடுவீர்கள். உடல் நிலை சளித்தொல்லை தரும். வீடு, வாகனத்தால் சிறப்பு, செலவுகளும் வரும். எதிர்பாலாருடன் முறுகல் நிலை வரும். சளி, வயிற்று நோ, தலைப்பாரம், வயிற்றுப்போக்கு என்பன கொடுக்கும். பாதுகாப்புத் துறை, மருந்துத்துறை, சந்தைத்துறை, விவசாயத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.*

### இடபம்

அழிவு, சண்டை, காப்பாற்றுதல், பிறப்பை உருவாக்குதல் இவை உலக தர்மத்தில் சமபங்கு பெறுகின்றன. இதை எவரும் சமாளிக்க முடியாது. தொழில்ஸ்தானத்தில் எடுத்த எடுப்பில் முன்னுக்குப் போகமுடியாது. உங்களிலும் பார்க்க முன்வந்தவர்கள் விடுவார்களா? திடீர் இடமாற்றம், தூரதேசப் பிரயாணம் வரலாம். சல வருத்தம், ஈரல் நோ, தொண்டை வருத்தம், சளி வருத்தம் என்பன வரும். அந்நிய பொருள் பொறுப்பால் மனக்குழப்பம் வரலாம். புடைவைத் துறை, தரகுத்துறை, போக்குவரத்துத் துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.*

### மிதுனம்

சுறுசுறுப்பான உங்களுக்கு அடிக்கடி கோபங்கள் வருவதனால் பல இழப்புக்களைச் சந்திப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் மூத்தவர்களைக் கனம் செய்யுங்கள். அயலவர்கள் உதவி செய்வார்கள். மாணவர்களுக்கு பல சிறப்புக்கள் கல்வியில் கொடுக்கும். இடமாற்றங்கள் சகஜமாகும். சளி வருத்தம், கைகால், நாரி உளைவு, களைப்பு, சலிப்பு, அடி காயங்கள் என்பன வரலாம். அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். நீதித்துறை, குருத்துறை, கோயில்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### கடகம்

அரசியல்வாதிகள் சாணக்கியத் தன்மையானவர்கள். இவர்களிடம் உண்மைகளை அறியமுடியாது. மேலும் அடிக்கடி மாற்றங்களைச் செய்துகொண்டு இருப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் அதுபோன்ற மாற்ற நிலைகள் வர இடம் உண்டு. பண வரவு இருக்கும். திடீர் தூரத்துச் செய்திகளால் நன்மைகள் அதிகரிக்கும். அயலவர்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தினர்களுக்கு சுபமங்களப் பேச்சுக்கள் கொடுக்கும் சலநோய், சளித்தொல்லை, முதுகு, நாரிநோ, காய்ச்சல் என்பன வரும். கடல்துறை, வியாபாரத்துறை, போக்குவரத்துத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், சனி.*

### சிங்கம்

சில சோதிடர்கள் கூட பொருத்தங்களை, முகூர்த்தங்களை பிழையாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது வேதனைக்குரிய செயற்பாடாகும். இளம் சந்ததிகள் சமூகச் சீரழிவில் சிக்கும் நேரம். இவர்கள் இப்படிச் செய்யலாமா? நிர்வாக பீடத்தில் இருப்பவர்களுக்குத்தான் அதன் தாக்கம் புரியும். ஆயினும் பாதிப்புக்கள் வராது. இயன்றளவு பொறுப்பானவர்கள பார்த்துக்கொள்ளல் வேண்டும். புதிய பொறுப்பு, செய்திகளால் மகிழ்ச்சி, உடல் நிலையில் களைப்பு என்பன வரும். காய்ச்சல், சளி வருத்தம் வரும். கண் வருத்தம் வரலாம். தொழில்நுட்பத்துறை, மருந்துத் துறை, குருத்துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: சனி.*

### கன்னி

ஆங்கிலத் திகதி இரவு 12.00 மணியிலிருந்து அடுத்த நாள் தொடக்கம். ஆனால் தமிழ் திகதி முதல் நாள் விடியற் காலையிலிருந்து அடுத்த நாள் விடியற்காலை 6.00 மணி (சூரிய உதயத்தைப் பொறுத்து) வரை இருக்கும். இதனைச் சிலர் விளங்காமல் விவாதிக்கின்றார்கள். இதேபோன்று தொழில் ஸ்தானத்திலும் சில உத்தியோகத்தர்கள் சில விஷயங்களை விளங்காமல் விவாதிப்பார்கள். எதிரிகளால் மறைமுகமாக அழுத்தம், சகோதரர்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். பண வரவும், மாணவர்களுக்கு புதிய நண்பர்களின் உதவிகளும் இருக்கும். செய்தித்துறை, வியாபாரத்துறை, குருத்துறை, தரகுவேலை, வியாபாரத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி, சனி.*

### துலாம்

இடைவிடாத உழைப்பு சிலரை நோயாளராக்கின்ற உண்மை அவர்களுக்குத் தெரியாமலா இருக்கிறது? தொழில்ஸ்தானத்தில் ஊக்கத்துடன் செயற்படுங்கள். வருமான அதிகரிப்பு ஏற்படும். வீடு மனை வாகனங்களால் செலவு கொடுக்கும். தூரத்துச் செய்திகள் வரலாம். எதிரிகளால் மறைமுகத் தாக்கங்கள் வரலாம். நிதானமாக இருக்கவும். சுகவீனம் காரணமாகச் செலவுகள் அதிகரிக்கும். ஓய்வு முக்கியம். சலவருத்தம், தலைப்பாரம், தலை வலி, குடல் வருத்தம், கிருமித் தாக்கம் வரும். குருத்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

மூன்று வருடங்களுக்கு மேல் நிறைவேறாத வீடுகளில் குடியிருந்து உள்ள வளங்களை இழக்காதீர்கள். துன்பப்படாதீர்கள். தொழில்ஸ்தானத்திலும் பல தில்லுமுல்லுகள் இருக்கும். வீடு, வாகனச் சிறப்பு இருக்கும். செய்திகளால் மன ஆறுதல் கிடைக்கும். அயலவர்கள் வஞ்சனை செய்யத் தருணம் காத்திருப்பர். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். சளித் தொல்லை வரும். தொண்டை, வயிறு வருத்தம் வரலாம். எண்ணெய்த் துறை, சாயப்புச் சாமான் விற்பனை, இரும்பு, மரத்துறை போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி, சனி.*

### தனுசு

மனிதர்கள் மன நிம்மதிக்காக எவ்வளவு அதிகமாகப் பணத்தைச் செலவு செய்கின்றார்கள்? தொழில் ஸ்தானத்திலும் மன நிம்மதிக்காக பொருளைச் செலவு செய்வீர்கள். புதிய திட்டங்கள் தாமதமாகலாம். எதிரிகளால் கஷ்டங்கள் வர இடமுண்டு. தூரத்துச் செய்திகள் மன நிறைவு கொடுக்கும். குடும்பத்தில் இடைக்கிடையே சடுகுடு, வீண்வாக்குவாதம் என்பன ஏற்படும். இடுப்புவலி, குடல், நாரிநோ, எலும்பு நரம்புப் பாதிப்பு, வயிற்றுவருத்தம் வரலாம். அரசியல்துறை, சட்டத்துறை, எண்ணெய்த்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி, சனி.*

### மகரம்

போராட்டம் என்பது ஒரு தொடர் கதையாகும். அது முடிவுக்கு வருவது விதி வழிச் செயலாகும். தொழில்ஸ்தானத்திலும் நல்ல முன்னேற்றம் கொடுக்கும். முயற்சிகளால் நன்மைகள் ஏற்படும். எதிர்பாலாருடன் பகைமை, போட்டிகள் வரும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பு கொடுக்கும். எலும்பில் தாக்கம், மனக் குழப்பம், தோல், கைகால் தாக்கம் என்பன கொடுக்கும். ரீ.வி., வீடியோ, புடைவை, நகை போன்ற துறையினர்கள், குருத்துறையினர்கள் சட்டத் துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி, சனி.*

### கும்பம்

வேளா வேளைக்குச் சாப்பிடாத பலரும் அல்சர் பீடித்து வருந்துகின்றார்கள். வேலை செய்தால் மட்டும் போதுமா? வேலை செய்யும் உடம்பினையும் காப்பாற்றுவது நமது கடமையும் கூட. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள், முயற்சியால் நன்மை. வாகனச் செலவுகள் அதிகரித்தல், உடல்களைப்பு அடிக்கடி கொடுக்கும். சாப்பாட்டை நேரத்திற்குக் கவனிக்கவும். பெரியவர்களின் உதவிகளால் மனத்திருப்திவரும். குருத்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்,சனி.*

### மீனம்

மற்றவர்களை ஏமாற்றுபவர்கள் ஏமாற்றப்படமாட்டார்கள் எனச் சிந்திக்க முடியாது? தொழில் ஸ்தானத்தில் பல ஏமாற்றங்கள் கொடுக்கும். மேலதிகாரிகள் உதவிகள் செய்து தருவர். மாணவர்களுக்கு நன்மையான காலமாகும். புதிய திட்டங்கள் நிறைவேறும். இனஜனக் கொண்டாட்டங்கள் கொடுக்கும். சளித்தொல்லை, மறதி, கைகால் தாக்கம் கொடுக்கும். வியாபாரத்துறை, நகைத்துறை, குருத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் பல முன்னேற்றங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், சனி.*

★

**மகாதேவா ஜோதிடம்**

---

### இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில்

# யாழ்.பல்கலையில் மூன்று தினங்கள் சிலப்பதிகாரம் தொடர்பான ஆய்வரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்15

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'சிலப்பதிகாரத்திற் பண்பாட்டுக் கோலங்கள்' என்னும் தலைப்பிலான ஆய்வரங்கு எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் தொடக்க வைபவ நிகழ்ச்சி யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் ஆரம்பமாகும். இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் இந்த அமர்வில் பிரதம விருந்தினராகவும், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பிப்பர்.

தொடக்க வைபவத்தின்போது இந்து சமய விவகார அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்துவார். தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையும், பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.பத்மநாதனின் அறிமுக உரையும் இடம்பெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனின் நிறைவுரையுடன் தொடக்க வைபவம் நிறைவு பெறும்.

ஆய்வரங்கின் முதலாவது அமர்வு அன்று மாலை 2 மணிக்கு ஆரம்பமாகும். 'நூலும் காலமும்' என்னும் பொருளில் இடம்பெறும் இவ்வமர்விற்கு பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை வகிப்பார். யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அ.சண்முகதாஸ், வருகைப் பேராசிரியர் வி.சிவசாமி, மெய்யியற்துறை விரிவுரையாளர் அன்டன் டயஸ் ஆகியோரும், வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதனும் முதலாம் அமர்வில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பர்.

மறுநாள் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு 'சிலப்பதிகாரத் தமிழகம்' என்னும் தலைப்பில் ஆரம்பமாகவுள்ள இரண்டாம் அமர்விற்கு, தமிழ்நாடு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் குருசாமி சேதுராமன் தலைமை வகிப்பார். தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அறங்காவலர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை வழங்குவார்.

தொடர்ந்து பேராசிரியர் சி.பத்மநாதன் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிற்றம்பலம், தமிழ்நாடு தொல்லியற்றுறை ஆய்வாளர் பேராசிரியர் வெள்ளைச்சாமி வேதாசலம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி செ. யோகராசா, யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

அன்று பிற்பகல் 2 மணிக்கு மூன்றாம் அமர்வு ஆரம்பமாகும். 'சமய நெறிகளும் கோயில்களும்' எனும் தலைப்பில் இடம்பெறும் இவ்வமர்விற்கு பேராசிரியர் க.சிற்றம்பலம் தலைமை வகிப்பார்.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் கு.சேதுராமன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ப.புஷ்பரட்ணம், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி அம்பிகை ஆனந்தகுமார், க.சகாதேவன், கொழும்பு திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் வை.கா.சிவப்பிரகாசம் ஆகியோர் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அருட்கவி.சீ. விநாசித்தம்பியின் ஆசியுரையுடன் நான்காம் அமர்வு ஆரம்பமாகும். 'சிலப்பதிகாரக் கதாபாத்திரங்கள்' என்னும் தலைப்பில் இடம்பெறும் இவ்வமர்விற்கு பேராசிரியர் வெ.வேதாசலம் தலைமை வகிப்பார். ஜப்பான் பல்கலைக்கழக வருகை ஆய்வாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவர் திருமதி சந்திரலேகா மௌனகுரு, பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன், யாழ்.பல்கலைக்கழக மெய்யியற் துறை தலைவர் பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா, சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிவானந்தமூர்த்தி ஆகியோர் இவ்வமர்வில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

அன்று பிற்பகல் 2 மணிக்கு ஐந்தாம் அமர்வு 'சிலப்பதிகாரத்திற் கலைகளும் பண்பாடும்' என்னும் தலைப்பில் ஆரம்பமாகும் யாழ்.பல்கலைக்கழக வருகைப் பேராசிரியர் வி.சிவசாமி இவ்வமர்விற்கு தலைமை வகிப்பார்.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு, பேராதனைப் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என்.வேல்முருகு, யாழ்.பல்கலைக்கழக மெய்யியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருஷ்ணவேணி நோபெட், தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.இரகுபரன், மட்டக்களப்பு கல்வித்திணைக்கள ஆசிரிய ஆலோசகர் பெ.பேரின்பராசா தமிழ்நாடு, அண்ணாமலைப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை விரிவுரையாளர் பேராசிரியர் என்.கே.சிவபாலன் ஆகியோர் ஐந்தாம் அமர்வில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு, ஆய்வரங்கு பற்றிய கலந்துரையாடலைத் தொடர்ந்து பேராசிரியர் சி.பத்மநாதனின் தொகுப்புரை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.தெய்வநாயகத்தின் நன்றியுரையுடன் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ள ஆய்வரங்கு நிறைவு பெறும். (எ)

# இந்து கலாசார நிதியத்தின் ஆளுநர் சபை புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்15

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் அதிகாரத்தின் கீழ் உள்ள இந்து கலாசார நிதியத்தின் ஆளுநர் சபை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாகச் செயலற்று இருநத மேற்படி சபை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் பணிப்புரையை அடுத்து புனரமைக்கப்பட்டுள்ளது.

இச்சபை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும திரட்டப்படும் நிதி மூலம் இந்துக் கோயில்களைப் புனரமைத்தல், இந்து சமயம் தொடர்பான ஆக்கங்கள், ஆராய்ச்சி மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை உருவாக்குதல், சைவ அநாதை இல்லங்களை அமைத்தல், அங்கவீனர்களுக்கு உதவியளித்தல், இந்து சமய உயர் கல்வியாளருக்கு புலமைப் பரிசில் திட்டத்தை உருவாக்குதல் போன்றவற்றை கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்தது.

தற்போது சபை புனரமைக்கப்பட்டதை அடுத்து மேற்படி பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட இந்நிதியத்தின் ஆளுநர் சபையின் முதலாவது கூட்டம் கடந்த 10ஆம் திகதி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (எ-13)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பூச்சி நீக்கிய 45 நாள்கள் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ.குணரட்ணம், மடத்தடி, கந்த ரோடை, சுன்னாகம். (4827)

நல்ல நிலையிலுள்ள Orginal Japan Sony கலர் T.V. 21" உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 252/1, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4829)

வர்ண Gold Fish மீன்கள், Peral, Redcap, ஏஞ்சல், Cat fish, silver shark என்பன விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 100 முதல். தொடர்பு: இல.169, ஆடியபாத வீதி, மருத்துவ பீடம் முன்பாக, திருநெல்வேலி. (4852)

கோல்ட்பிஷ், ஏஞ்சல், கலிக்கோ மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.விஜயன், 35/1, இந்துக்கல்லூரி அருகில் உள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4847)

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள் விற்புனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (4862)

மானிப்பாய் நவாலி றோட் (இடிகுண்டடி)இல் 50பரப்பு நெற்காணி விறபனைக்குண்டு. மேலதிக விவர தொடர்பிற்கு:- மு.தயாபரன், பொன்மலர் களஞ்சியம், அளவெட்டி. T.P.No.:070-212558, 01-593127, 078-679807. (4821)

மானிப்பாயில் வளவு 2 1/2 பரப்பு இணுவில் ஒழுங்கையில், பாதையுரிமையுடன். கிளிநொச்சியிலும் கடையும் காணியும் கண்டிறோட்டில. கூடியதொகை கேட்கும் நபரின் விணணப்பம் ஏற்புடையது. தரகர் தேவையில்லை. தொடர்பு: இரத்தினசிங்கம், 15/1, 2ஆம் சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை. தொலைபேசி: 01-595419 (C/22409)

சுதுமலை கிழக்கில், அரசடி ஒழுங்கையில், மானிப்பாய் வீதிக்குச் சமீபமாக 4 1/2 பரப்புக் காணிக்குள் அமைந்த (சகல வசதிகளோடு நல்ல வருமானமும் கொண்ட) நல்ல வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ரதி கனகசபை, அரசடி ஒழுங்கை, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (4850)

## வகுப்புகள்

Maths புதிய, பழைய பாடத் திட்டத்தில் O/L பரீட்சையில் A, B, C பெறுபேறடைய தரம் 8, 9, 10 உட்பட கற்பிக்கப்படும். அனுபவம் மிகுந்த ஆசிரியர். நேரம் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (4824)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர் மற்றும் இறைச்சிக் கோழிகள் உடன் தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு: 19, முருகேசர் லேன், முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4817)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம் தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (4773)

Prima புறொயிலர் குஞ்சுகளும், சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் லேன், முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4849)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4763)

## தவறிவிட்டது

அருளானந்தம் டினேஷ்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.770074690V) முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 107/3, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (4826)

போயிட்டி, அச்செழு, நீர்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த சிவயோகராசா சிவரொபின்சன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.800652278V), விசேட அடையாள அட்டை (இல.0903030015) என்பன திருநெல்வேலி சந்தைப் பகுதியில் 10.05.2002 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (4830)

## வாடகைக்குத் தேவை

நல்ல படித்த குடும்பத்துக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 233/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (4856)

## ஒத்துமாறல்

பேராதனைப் பல்கலைக்கழகத்து பொறியியற்பீடத்துக்குத் தெரிவான ஒருவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு ஒத்துமாற விரும்புகின்றார். தொடர்பு: ச.பேரானந்தன், 17, நாயன்மார் வீதி, நல்லூர். (4859)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## Dr இரா.கனகலிங்கம்

(தலைவர், அகில இலங்கை அரசசேவை ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்)

அவர்கள் பலகாலமாக எமது சங்கத்தின் தலைவராக இருந்து சங்கத்தைத் திறம்பட வழிநடத்தியவர். அவர் பதவியில் இருந்து ஓய்வுபெற்று அறுபதாவது அகவையைக் கொண்டாடும் இவ்வேளையில், நாம் அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அ/இ/அ/சே/ஆ. வைத்திய அதிகாரிகள் சங்கம்

(4860)

# மரண அறிவித்தல்

## யோசெப் வரப்பிரகாசம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசெப் வரப்பிரகாசம் அவர்கள் நேற்றுமுன்தினம் (13.06.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மாசிலாமணியின் அன்புக்கணவரும் இராசநாயகம், மேரி வசந்தா, அக்னெஸ்ராணி, ஜெபநேசன், றெஜினா, டெனிஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னராஜசிங்கம், லியோனாட்றொய்ஸ், ஜேம்ஸ் பாலச்சந்திரன், றூபி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2002) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.* (4858)

*தகவல்:* வ.டெனிஸ் (மகன்)

# சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) சாவகச்சேரி

## கிளைக்குழுத் தெரிவுக்கான

# அறிவித்தல்

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17ஆம் திகதி 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் என்மீது பாலிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இன் ஏற்பாட்டின்படி வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1928/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இன் ஏற்பாடுகளுக்கமைய சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை நடத்துவதற்காக மேற்படி விதிகளின் பிரிவு 6இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணை பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி விதியின் பிரிவு 7இன்படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும் அதன் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரமளித்து நியமித்துள்ளேன் என்பதனையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

தவிசாளராக என்னால் பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலரினால் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கும் உரிமை பெற்ற முழு உறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறிவித்தல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடப்பெயர்வு காரணமாக அறிவித்தல்கள் கிடைக்காதுபோகும் உறுப்பினர்கள் இவ்வறிவித்தலை தங்களுக்குத் தனித்தனியாக வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொண்டு குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளிக்கும்படியும் கேட்டுக் கொள்கின்றேன்.

உறுப்பினராகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தைக் கடந்தவரும் ஒரு பங்கின் முழுப் பெறுமதியான ரூபா 100/=ஐச் செலுத்தி முடித்தவருமான உறுப்பினர் ஒருவரே கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கும் உரிமைபெற்ற முழு உறுப்பினர் தகைமைபெற்ற உறுப்பினராகக் கருதப்படுவர்.

ஒவ்வொரு கிளைகளினதும் முழு உறுப்பினர் தகைமைபெற்ற உறுப்பினர் (வாக்காளர்) அட்டவணைகளை சங்கத் தலைமை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

**காலம்:-** **2002.06.30 ஞாயிற்றுக்கிழமை**

**கூட்ட ஆரம்பம்:-** **முற்பகல் 10.00 மணி.**

| தொ.இ. | கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 01 | தென்மராட்சி | திரு.கே.குமரகுருலிங்கம் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 02 | 02 | சாவகச்சேரி தெற்கு | திரு.கே.சின்னராசா | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 03 | 03 | நுணாவில் கிழக்கு | திரு.பி.மகேஸ்வரன் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 04 | 04 | நுணாவில் ஜோதி | திரு.வீ.கே.அருந்தவநாதன் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 05 | 05 | கைதடி நுணாவில் | திரு.சு.கணேசு | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 06 | 06 | மீசாலை தெற்கு | திரு.ஆர்.புவன்ராஜ் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 07 | 07 | வேரக்கேணி | திரு.எஸ்.சண்முகநாதன் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 08 | 08 | மலர்மகள் | திருமதி பி.சண்முகம் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 09 | 09 | சோமஸ்கந்தா | திரு.என்.பத்மசோதி | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 10 | 10 | மட்டுவில் வடக்கு | திரு.ஏ.நாகலிங்கம் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 11 | 11 | சரசாலை மட்டுவில் | திருமதி எஸ்.அழகேந்திரராசா | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 12 | 12 | சரசாலை தெற்கு | திருமதி வி.யோகேஸ்வரி | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 13 | 13 | சரசாலை வடக்கு | திருமதி கே.சித்திரகுமாரி | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 14 | 14 | மோகனதாஸ் | திரு.எஸ்.செந்தூரன் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 15 | 15 | கல்வயல் | திருமதி கே.நல்லதம்பி | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 16 | 16 | சாவ.வடக்கு | திருமதி கே.இந்திராணி | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 17 | 17 | வேம்பிராய் | திரு.ரீ.என்.ராஜா | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 18 | 18 | மீசாலை வடக்கு | திரு.பி.மோகன் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 19 | 19 | மீசாலை தெற்கு | திரு.வீ.கைலைநாதன் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 20 | 20 | சாவ.வடகிழக்கு | திரு.ஜ.நாகேஸ்வரன் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 21 | 21 | சங்கத்தானை | திரு.பி.தெட்சணாமூர்த்தி | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 22 | 22 | சாவ.4ஆம் வட்டாரம் | திருமதி வை.சுகன்யா | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |
| 23 | 23 | கோவில் குடியிருப்பு | திரு.க.குகதாசன் | சாவ/இந்துக் கல்லூரி, சாவ. |

*கூட்டுறவு அலுவலகம்*
*857, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**செ.கனகசபாபதி**
கூ.அ.உ.ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

### குறிப்பு -1 கிளைக்குழு தெரிவு தொடர்பான முக்கிய விதிகள்

- ❖ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- ❖ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக் குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவர் (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- ❖ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- ❖ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டுமூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- ❖ தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.

### குறிப்பு -2 கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
02. 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்.
03. உடன் முன்சென்ற 3 ஆண்டுகளுள் தீய ஒழுக்கச் செயலுக்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர். அல்லது 3 மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
04. கடனைத் தீர்க்க வகையற்றவர் எனப் பிரகடனம் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கிற் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
05. இச்சங்கத்திற்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட வேறு எக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக் கொடுக்காதவர் அல்லது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.
06 இச்சங்கத்தில் வியாபாரியெனப் பதிவுசெய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட வகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர்.
07. சங்கத்தின் ஆதாயங்கருதி ஏதாவது ஒரு பகுதியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையைப் பெறுபவர்.
08. இச்சங்கத்தில் அல்லது இச்சங்க உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
09. ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினாற் செய்யப்படும் எந்த விற்பனையிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனாற் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவிலிருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த 5 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. நாடாளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்.
12. அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100/= ஐப் பங்குப் பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.
13. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6(2)இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வுமூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6 இன் கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையிற் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.

(சி-22516) **(சங்கத்தின் துணைவிதிப் பிரிவு இல.22(1))**




# கணிப்புகளைத் தகர்த்தெறிந்த உலகக் கிண்ண முதல் சுற்று!

**17ஆவது** உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த மாதம் 30ஆம் திகதி தென்கொரியத் தலைநகர் சியோலில் வெகு கோலாகலமாக ஆரம்பமானது. எதிர்பார்ப்புக்களையும் கணிப்புக்களையும் பொய்யாக்கித் தகர்த்தெறிந்திருக்கின்றன நேற்றுவரை நடைபெற்ற முதற்சுற்று ஆட்டங்கள்.

ஆரம்பமே அதிர்ச்சி! கடந்தமுறை உலகக் கிண்ணத்தை வென்ற பிரான்ஸ் அணி ஆரம்ப ஆட்டத்திலேயே ஆபிரிக்க அணியான செனகலிடம் தோல்வியடைந்து அதிர்ச்சியை ஏற்படுததியது. இதில் விசேடம் என்னவென்றால், உலக உதைபந்தாட்டச் சம்மேளனமான FIFAயின் தரக்கணிப்பிட்டில் முதல் இடதில் இருந்தது. ஜரோப்பிய கழகங்களிடையிலான ஆட்டங்கள்

## இரண்டாம் சுற்று ஆட்டங்கள் இன்றுமுதல் ஆரம்பமாகின்றன

மற்றும் உலகக் கிண்ண தகுதிச்சுற்று ஆட்டங்களின பெறுபேறுகளின் அடைப்படையில் இந்தத் தரக்கணிப்புச் செய்யப்பட்டிருந்தது.

இதனால் இம்முறையும் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றக கூடிய அணிகளின் வரிசையில் பிரான்ஸ"க்கு முக்கிய இடம் இருந்தது. ஆனால், முதல் நாள் இடம்பெற்ற ஆரம்ப ஆட்டத்திலேயே பிரான்ஸ், அவ்வளவு பிரபலமில்லாத செனகல் அணியிடம் 1-0 என்ற கோல் அடிப்படையில் தோற்றது. பிரான்ஸின் இந்தத் தோல்வியால் ஆடிப்போனவர்கள் இந்த நாட்டு ரசிகர்கள் மட்டுமல்ல உதைபந்தாட்ட விமர்சகர்களும் கூடத்தான்.

பிரான்ஸ் அணியில் ஆட்டத்தை நிர்ணயிக்கும் வீரர் (play


மெக்ஸிக்கோவில் ரசிகர் பொலீஸாரால் கைது

maker) என்று வர்ணிக்கப்படும் ஸிடான் ஸிடானி ஆரம்ப ஆட்டத்தில் விளையாடாதது தோல்விக்கான ஒரு காரணம் என்று சப்பைக்கட்டு கட்டப்பட்டது. (1998 உலகக் கிண்ண போட்டிகளின இறுதியாட்டத்தில் பிரான்ஸ் அணி வெற்றிபெற முக்கியமானவராக இருந்தவர் இவர்.) ஆனால், டென்மார்க்குடனான ஆட்டத்தில ஸிடானி விளையாடினார். எனினும், அவரால் ஆட்டத்தின் போக்கை நிர்ணயிக்கமுடியவில்லை இந்த ஆட்டத்திலும் 2-0 என்ற கோல் அடிப்படையில் டென்மார்க்கிடம் பிரான்ஸ் தோல்வ் அடைந்தது. உருகுவேயுடனான ஆட்டம் ஒன்றை மட்டுமே பிரான்ஸ் சமநிலைப்படுத்தியது.

### முதல் சுற்றில் சாதனைகள்

1. அதிக கோல்கள் அடித்த அணிகள் - பிரேஸில் (11), ஜெர்மனி (11)
2. அதிக கோல்கள் வாங்கிய அணி - சவூதி அரேபியா (12)
3. கோல்கள் எதுவும் அடிக்காத அணிகள் - பிரான்ஸ், சீனா, சவூதி அரேபியா.

பிரான்ஸின் இந்த படுதோல்வியை அந்த நாட்டு ரசிகர்களால ஜீரணித்துக்கொள்ளவே முடியவில்லை. மைதானத்திலேயே கண்ணீர்விட்டுக் கதறி அழுதார்கள். பிரான்ஸின் இந்தத் தோல்வி அணிகளின் தரநிர்ணய முறைகளையும் ஆட்டங்கள் தொடர்பான கணிப்புக்களையும் கேள்விக் குறியாக்கியுள்ளன.

உதைபந்தாட்டம் என்பது கிரிக்கெற் போன்றது அல்ல; முடிவுகள் கால நிலையாலும், களநிலையாலும் தீர்மானிக்கப்படுவதற்கு அது ஒவ்வொரு வீரரதும் தனிப்பட்ட திறமைகளை அடிப்படையாகக் கொண்டது. சிறந்த வீரர்களைக் கொண்ட பலமானது எனக் கருதப்படும் ஓர் அணி



பின்னடைவுகளைச் சந்திப்பது அரிது.

ஆனால், இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்தக் கணிப்புக்கள் எல்லாம் தவிடுபொடியாகின. இதற்குப் பிரான்ஸ் அணியின் தோல்வி மட்டும் காரணமல்ல. உலகக் கிண்ணத்தை இம்முறை வெல்லக்கூடிய அணிகளுள் ஒன்றெனக் கருதப்பட்ட



மற்றொரு அணியான ஆர்ஜென்ரீனா முதற்சுற்றிலேயே நாடு திரும்பியமை; தகுதிச் சுற்று ஆட்டங்களில் தட்டுத்தடுமாறி இறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்ற பிரேஸில் அணி அபாரமாக ஆடி, தான் சந்தித்த மூன்று போட்டிகளிலும் வென்று முன்னணியில் திகழ்வது; கிண்ணத்தை வெல்லும் என்று எதிர்பார்க்கப் பட்ட மற்றோர் அணியான இத்தாலி இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெறத் திணறியமை என்பனவும் காரணங்களாக அமைந்துள்ளன.

இத்தகைய அதிர்ச்சி முடிவுகளையும் திடீர்த் திருப்பங்களையும் கொண்ட முதற்சுற்று ஆட்டங்கள் நேற்றுடன் முடிவடைந்துள்ளன. இந்தச் சுற்றில் 32 அணிகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் தமக்கிடையில் ஆடின.


ரீவால்டோ, எட்மில்சன்

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடித்த அணிகள் இரண்டாம் சுற்றில் ஆடுவதற்குத் தகுதி பெற்றுள்ளன. இந்த எட்டுப் பிரிவுகளில் இரண்டு, இரண்டு பிரிவுகள் தமக்கிடையில் மோதிக்கொள்ளும். அதாவது, ஒரு பிரிவில் முதல் இடததினைப் பெற்ற அணி மற்றைய பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்ற அணியுடனும், அதேபிரிவில் முதல் இடம் பெற்ற அணி முன்னைய அணியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற அணியுடனும் மோதும்.

இவ்வாறு பிரிவு 'ஏ' - பிரிவு 'எவ்', பிரிவு 'பி' - பிரிவு 'ஈ', பிரிவு 'சி' - பிரிவு 'எச்', பிரிவு 'டி' - பிரிவு 'ஜி' என்பன தமக்குள் மோதிக்கொள்ளும். இதில் வெற்றிபெறும் 8 அணிகள் கால் இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெறும்.

இதுவரை இடம்பெற்ற முதற்சுற்று ஆட்டங்களில் பிரேஸில் மற்றும் ஸ்பெயின் ஆகிய அணிகள் தாம் விளையாடிய மூன்று ஆட்டங்களிலும் வென்று முன்னணியில் இருக்கின்றன. மற்றொரு புறத்தில் ஜேர்மனி, டென்மார்க், மெக்ஸிக்கோ ஆகிய அணிகள் இரு ஆட்டங்களில் வென்று ஒன்றைச் சமப்படுத்திய நிலையில் பலமாகக் காணப்படுகின்றன.

ஆசிய அணிகளும் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தும் நாடுகளின் அணிகளுமான ஜப்பான் மற்றும் தென்கொரியா அணிகளும் மற்றும் துருக்கி அணியும் சிறப்பாக விளையாடி இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளன. இந்தச் சுற்றில் தென்னமெரிக்க மற்றும் ஐரோப்பிய அணிகளுக்கு முழுமையாக ஈடுகொடுக்குமா என்பது சந்தேகத்துக்குரியது. எனினும், அவற்றுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் மற்றுமொரு சிறப்பு தென்னமெரிக்க மற்றும் ஐரோப்பிய அணிகளுக்கு ஈடுகொடுத்து ஆடிய ஆபிரிகக அணிகள். வியத்தகு வெற்றிகளையும் அவை குவித்துள்ளன. எனினும், துரதிஷ்டவசமாக செனகல அணி மட்டுமே இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

1998இல் பிரான்ஸில் நடந்த 16ஆவது உலகக் கிண்ணப் போட்டிகளில் முதற்றடவையாகப் பங்குபற்றி மூன்றாம் இடத்தைத் தட்டிச் சென்ற குரோஷிய அணி இம்முறை முதற்சுற்று ஆட்டத்துடனேயே வெளியேறியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

முதற்சுற்று ஆட்டங்கள் இத்தகைய அதிர்ச்சிகளுடனும் திடீர்த் திருப்பங்களுடனும் நிறைவு பெற்றுள்ளன. இன்று ஆரம்ப மாகும் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் மேலும் விறுவிறுப்பாகவும் - எதிர்பார்ப்புக்குரியதாகவும் - இருக்கும் என்பதில் ஐயமில்லை.

- பிரேம் - ஆகாஷ்.

| நாடுகள் | P | W | D | L | F | A | GD | PTS |
|---|---|---|---|---|---|---|---|---|
| **குழு A** | | | | | | | | |
| 1. டென்மார்க் | 3 | 2 | 1 | 0 | 5 | 2 | 3 | 7 |
| 2. செனகல் | 3 | 1 | 2 | 0 | 5 | 4 | 1 | 5 |
| 3. உருகுவே | 3 | 0 | 2 | 1 | 4 | 5 | -1 | 2 |
| 4. பிரான்ஸ் | 3 | 0 | 1 | 2 | 0 | 3 | -3 | 1 |
| **குழு B** | | | | | | | | |
| 1. ஸ்பெயின் | 3 | 3 | 0 | 0 | 9 | 4 | 5 | 9 |
| 2. பரகுவே | 3 | 1 | 1 | 1 | 6 | 6 | 0 | 4 |
| 3. தென்னாபிரிக்கா | 3 | 1 | 1 | 1 | 5 | 5 | 0 | 4 |
| 4. ஸ்லோவேனியா | 3 | 1 | 0 | 3 | 2 | 7 | -5 | 0 |
| **குழு C** | | | | | | | | |
| 1. பிறேசில் | 3 | 3 | 0 | 0 | 11 | 3 | 8 | 9 |
| 2. துருக்கி | 3 | 1 | 1 | 1 | 5 | 3 | 2 | 4 |
| 3. கொஸ்ராறிக்கா | 3 | 1 | 1 | 1 | 5 | 6 | -1 | 4 |
| 4. சீனா | 3 | 0 | 0 | 3 | 0 | 9 | -9 | 0 |
| **குழு D** | | | | | | | | |
| 1. தென்கொரியா | 3 | 2 | 1 | 0 | 4 | 1 | 3 | 7 |
| 2. அமெரிக்கா | 3 | 1 | 1 | 1 | 5 | 6 | -1 | 4 |
| 3. போர்த்துக்கல் | 8 | 1 | 0 | 2 | 6 | 4 | 2 | 3 |
| 4. பொலண்ட் | 3 | 1 | 0 | 2 | 3 | 7 | -4 | 3 |
| **குழு E** | | | | | | | | |
| 1. ஜெர்மனி | 3 | 2 | 1 | 0 | 11 | 1 | 10 | 7 |
| 2. அயர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 5 | 2 | 3 | 5 |
| 3. கெமரூன் | 3 | 1 | 1 | 1 | 2 | 3 | -1 | 4 |
| 4. சவூதி அரேபியா | 3 | 0 | 0 | 3 | 0 | 12 | -12 | 0 |
| **குழு F** | | | | | | | | |
| 1. சுவீடன் | 3 | 1 | 2 | 0 | 4 | 3 | 1 | 5 |
| 2. இங்கிலாந்து | 3 | 1 | 2 | 0 | 2 | 1 | 1 | 5 |
| 3. ஆர்ஜென்ரீனா | 3 | 1 | 1 | 1 | 2 | 2 | 0 | 4 |
| 4. நைஜீரியா | 3 | 0 | 1 | 2 | 1 | 3 | -2 | 1 |
| **குழு G** | | | | | | | | |
| 1. மெக்ஸிக்கோ | 3 | 2 | 1 | 0 | 4 | 2 | 2 | 7 |
| 2. இத்தாலி | 3 | 1 | 1 | 1 | 4 | 3 | 1 | 4 |
| 3. குரோஷியா | 3 | 1 | 0 | 2 | 2 | 3 | -1 | 3 |
| 4. ஈகுவடோர் | 3 | 1 | 0 | 2 | 2 | 4 | -2 | 3 |
| **குழு H** | | | | | | | | |
| 1. ஜப்பான் | 3 | 2 | 1 | 0 | 5 | 2 | 3 | 7 |
| 2. பெல்ஜியம் | 3 | 1 | 2 | 0 | 6 | 5 | 1 | 5 |
| 3. ரஷ்யா | 3 | 1 | 0 | 2 | 4 | 4 | 0 | 3 |
| 4. ரியுனிஷியா | 2 | 0 | 1 | 2 | 1 | 5 | -4 | 1 |

**P** - விளையாடிய ஆட்டங்கள்
**W** - பெற்ற வெற்றிகள்
**D** - சரிசமமாக முடிந்த போட்டிகள்
**L** - தோல்வியடைந்த போட்டிகள்
**F** - அணி பெற்ற மொத்த கோல்கள்
**A** - எதிரணி அடித்த மொத்த கோல்கள்
**GD** - பெற்ற - வாங்கிய கோல் வித்தியாசம்
**PTS** - அணி பெற்ற மொத்தப் புள்ளிகள்


தமது அணி வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் துருக்கி ரசிகர்கள்.

### இரண்டாம் சுற்று ஆட்டங்கள்

| திகதி | மோதும் அணிகள் | | | மைதானம் | நாடு | நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 15.06. | பரகுவே | Vs | ஜேர்மனி | ஜிஒன்சு | கொரியா | 12.30 |
| 15.06. | டென்மார்க் | Vs | இங்கிலாந்து | நிகிடா | ஜப்பான் | 5.30 |
| 16.06. | சுவீடன் | Vs | சென்கல் | ஒய்டா | ஜப்பான் | 12.30 |
| 16.06 | ஸ்பெயின் | Vs | அயர்லாந்து | சுவோன் | கொரியா | 5.30 |
| 17.06. | மெக்ஸிக்கோ | Vs | அமெரிக்கா | ஜிஆன்ஜு | கொரியா | 12.30 |
| 17.06. | பிரேஸில் | Vs | பெல்ஜியம் | கோபே | ஜப்பான் | 5.30 |
| 18.06 | ஜப்பான் | Vs | துருக்கி | மியாகி | ஜப்பான் | 12.30 |
| 18.06. | தென்கொரியா | Vs | இத்தாலி | டெய்ஜ்ஆன் | கொரியா | 5.30 |

## பெண் காசாளர் தேவை!

எமது விற்பனை நிலையத்துக்கு பெண் காசாளர் தேவைப்படுகின்றார். உடனே நேரில் வரவும்.

233/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (4855)

## பீடி புகையிலை தேவை

யாழ். குடாநாட்டில் விளைவிக்கப்பட்ட பீடி புகையிலை தரத்துக்கேற்ப நியாய விலையில் வாங்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

ஆர்.வி.ஜி. பீடி ஸ்தாபனம்,
58, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4861)


## 45ஆம் நாள் நினைவலைகளும்
## நன்றி செலுத்தும் வழிபாடும்

| தோற்றம் | | மறைவு |
| --- | --- | --- |
| 10 | | 01 |
| - | | - |
| 03 | | 05 |
| - | | - |
| 1929 | | 2002 |



## அமரர் வ.சின்னத்தம்பி

(ஆலய பராமரிப்பாளர், தென் இந்தியத் திருச்சபை)

*"மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வது மேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன"*
*- திருவிலியம்*

மறுமைக்குள் பிரவேசித்துள்ள அமரர் சின்னத்தம்பி அவர்களின் வாழ்வுக்கும், பணிக்கும் ஆண்டவருக்கு நன்றிசெலுத்தும் வழிபாடு நாளை (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி தென் இந்தியத் திருச்சபையில் நடைபெறும். அனைவரையும் இந்த வழிபாட்டில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக மன்றாடும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

திருமதி செல்லம்மா சின்னத்தம்பி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (4867)

தற்காலிக முகவரி:
*ஓராம்கட்டை, பருத்தித்துறை.*

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பு குணரத்தினம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பு குணரத்தினம் அவர்கள் நேற்று (14.06.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குணபூபதி மற்றும் இரத்தினபூபதி, இரத்தினகோபால் (ஆஸ்திரேலியா), சத்தியபூபதி, ஜெயபூபதி (லண்டன்), பாலபூபதி, சிவபூபதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், சூரியகுமார் மற்றும் சண்முகரத்தினம், சதானந்தன், ஜெயந்தன், அரசகுலநாதன், உஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் தக்சாயினி, துஸ்யந்தினி, ஆரணி, தெய்வீகா, அபிராமி, சாயி பிரசாந், தமிழரசி, தமிழ்மாறன், கிளாஸ்ரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.06.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.4, கல்லூரி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (4866)

தகவல்:
சண்முகரத்தினம், ஜெயந்தன்
(மருமகன்மார்)

## மாணவர் மயக்கம்

கோப்பாய்,ஜூன்15

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு அருகில் உள்ள வளவொன்றில் பழைய குப்பைகள் கூட்டி எரிக்கப்பட்டபோது இனந்தெரியாத இரசாயன பொருள் எரிந்ததன் காரணமாக பாடசாலைச் சூழலின் ஒரு பகுதியில் தொடர்ந்து இரசாயன மணம் வீசுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று பாடசாலை ஆரம்பமான வேளை குறித்த சூழலில உள்ள வகுப்பறை மாணவர்கள் சிலர் தலையிடி, தலைச்சுற்று மயக்கத்திற்கு உள்ளாக நேர்ந்ததாகவும் -

மேலும் ஆசிரியர் ஒருவரும் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும் - கூறப்பட்டது.

குப்பை எரிக்கப்பட்டதற்கு அருகில் உள்ள கட்டடங்களின் பெயின்ற உருகி உள்ளதுடன், மரங்களின் இலைகளும் சொரிந்துள்ளன. இது குறித்து கோப்பாய் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-72)

## மின் இணைப்பு வழங்கப்படாதது குறித்து மக்கள் விசனம்

கொழும்புத்துறை சுவாமியார் லேன் பகுதியில் தற்போது மீளக் குடியமர்ந்து வரும் மக்களின் நன்மை கருதி மின் இணைப்பு வழங்கப்படாதது குறித்து பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மீளக்குடியமர்ந்துள்ள சுமார் இருபது குடும்பங்களுக்கு இன்னும் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## சபிண்டீகரணக்கிரியை அழைப்பும்



அமரர்
### தம்பையா சரவணமுத்து
(சண்முகம்)

| கண்மகிழ | கண்நெகிழ |
| --- | --- |
| 1943-03-06 | 2002-05-16 |

*கண்ணின் இமைபோல்*
*காத்த எம் தெய்வமே!*
*கண்ணீரைப் பரிசாய்*
*கணப்பொழுதில் தந்தீரே!*
*நித்தம் நித்தம் எம்மனதில்*
*நினைவுகள் உமதே – எம்மை*
*நினையாது நீங்கள் பிரிந்ததேனோ?*
*நிஜமாய் நீங்கள் எம்முடன் வாழ்கின்றீர்*
*ஆலம் விழுதுபோல் உறவுகள்*
*ஆயிரம் இருந்தென்ன – என்றும்*
*அப்பா நீங்கள் ஆதரவாய் இருந்தீர்களே!*
*எங்கள் இதயத்தில்*
*என்றும் குடியிருந்து*
*எம்மை வழி நடத்துவீர் அப்பா!*
*ஏங்கி ஏங்கித் தவிக்கின்றோமே*
*ஏன் அப்பா இந்நிலை எமக்களித்தீர்?*
*கடவுளை யாசிக்கின்றோம்*
*மீண்டும் ஒருமுறை எம்மிடம் வாருங்கள்!*

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (15.06.2002) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் பின்னர் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பட்டினசபை ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (4868)

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.


வலிகாமம் தென்மேற்கு பிரதேச மக்களுக்காக

## இலங்கை வங்கி

மானிப்பாய்க் கிளை வழங்கும்

## விசேட நடமாடும் சேவை

இன்று (15.06.2002) சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு இலங்கை வங்கி யாழ்.மேற்தரக்கிளை பிரதம முகாமையாளர் திரு. S.விக்னராஜா அவர்களால் பண்டத்தரிப்பு மணியம் கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்படும் இவ்வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர், திரு. N.வேதநாயகம் அவர்களும், சங்கானை பிரதேச செயலர் திரு. S.இரத்தினம் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

*பிரதி சனிக்கிழமையும் காலை 9.00 மணி முதல் பி.ப. 1.30 மணிவரை வழங்கவுள்ள சேவைகள்:*

- நடைமுறைக் கணக்குகள்
- சேமிப்புக் கணக்குகள்
- சிறுவர் பொன் அரும்புக் கணக்குகள்
- சேமிப்புச் சான்றிதழ்கள்
- மகளிர் பொற்கணக்குகள்
- நிலையான வைப்புக்கள்
- 18+Plus
- விவசாயிகள் பொற்கணக்கு
- வெளிநாட்டுக் காசோலைகள் மாற்றுதல்
- கடன்வழங்கல்சம்பந்தமான ஆலோசனைகள்

★ அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்துசிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
இலங்கை வங்கி,
மானிப்பாய். (C/22520)

உங்கள் தேவைகளைச் சந்திக்கும் வங்கி.

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்.மாவட்டம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஆதரவில்

## மூன்றாவது மனிதன்
## புத்தகக் காட்சியும் விற்பனையும்

சிறுகதை / நாவல் / கவிதை/ நோபல் பரிசு பெற்ற படைப்புகள் / மொழியாக்கம் / விமர்சனம் பெண்ணியம் / தலித்தியம் / மாக்சியம் / பெரியாரியம் / கலை / சினிமா / மதவியல் பொருளியல் / பண்பாட்டியல் / அரசியல் / தத்துவம் / மானிடவியல் / சமூகவியல் / கல்வியியல் /மனையியல் நாட்டுப்புறவியல் / சிறுவர்களுக்கான ஆங்கில தமிழ் நூல்கள் / பழந்தமிழ் இலக்கியம் /சோதிடம்

கலைக்களஞ்சியம் / அகராதி /கணனியியல் / C.D க்கள் / க.பொ.த.(சா/த) / க.பொ.த (உ/த)
அனைத்துப் பாடங்களுக்குமான பயிற்சி நூல்கள்/ சிறு சஞ்சிகைகள் மற்றும் காகிதாதிகள்

**யூன் 14, 15, 16, 17 யாழ் பல்கலைக்கழக கேட்போர் கூடம் 10.00 மணி – 5.00 மணி**

V.P.P யில் புத்தகங்களைப் பெறலாம். தொடர்புகளுக்கு ☞
மிலேனியம் புக் லாண்ட்
465/1 காலி வீதி, கொழும்பு -03
தொலைபேசி இல.:01-589606
பெக்ஸ்:01-589460

### யாழ். குடாநாட்டில்

# புகையிலை, மிளகாய், வாழை பயிர்களுக்கு விரைவில் காப்புறுதித்திட்டம் அறிமுகம்!

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.மாவட்டத்தில் புகையிலை, முந்திரிகை, மிளகாய், வாழை போன்ற பயிர்களை காப்புறுதி செய்வதற்கான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தலைவர் பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூர், புத்தூர் கமநல சேவைத்திணைக்களங்களில் நடைபெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடலிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

காப்புறுதித் திட்டம் குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மேற்படி காப்புறுதித்திட்ட மூலம், யாழ்.மாவட்ட விவசாயிகள் ஏனைய மாவட்ட விவசாயிகளின் சலுகைகளையும் பெறும் வாய்ப்பு ஏற்படும்.

யாழ்.மாவட்டத்தில் முன்னர் நெல காப்புறுதித் திட்டம் நடைமுறையில் இருந்தது. பின்னர் அகில இலங்கை ரீதியாக மாணாவாரி காலங்களில் நெல் காப்புறுதி வழங்குவது இடைநிறுத்தப்பட்டபோது இங்கும் அந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

எனினும், அந்தத் திட்டத்தை மீண்டும் இங்கு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து, பின்னர் இடம்பெயர்வு காரணமாக 5 தவணைகளில் பணம் கட்டத் தவறியவர்கள் மீண்டும் இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்ள ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும்.

இந்தக் கலந்துரையாடல்களில் மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.யோசப், அரச அதிபர் க.சண்முகநாதன், கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஏ.சுந்தரேசன் மற்றும் அரச அதிகாரிகள், மிருக வைத்தியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-180)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்15

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் அமரர் இரத்தினசாமி ஞாபகார்த்த கேடயத்துக்காக கழக மைதானத்தில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய வ.கவும் புத்தூர் வீனஸ் வி.கவும் மோதுகின்றன. (எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன்15

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ காலை 8 மணி - யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் கிராஸகொப்பர்ஸ் வி.க.அணி.

☆ காலை 9.15 - ஓல்ட் கோல்ட்ஸ வி.க. அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

☆ முற்பகல் 10.30 மணி - உடற்கல்விப் பிரிவு அணி எதிர் சென்ரலைட்ஸ் வி.க. அணி.

அன்று 2.30 மணிக்கு 3 ஆம் இடத்துக்கான ஆட்டமும் மாலை 4 மணிக்கு இறுதி ஆட்டமும் இடம்பெறவுள்ளன. (ஐ-3)

★ ★ ★

இலங்கைவங்கி, வர்த்தகவங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இணுவில் அறிஞர் வி.கவும் சண்டிலிப்பாய் சிவசக்தி வி.கவும் பங்குபற்றுகின்றன. (ஐ-3)

★ ★ ★

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 'எவறெடி' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

நாளை பி.ப. 4மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் அணி விளையாடவுள்ளது.

இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் மேற்கொண்டுள்ளது. (ஐ-ரி)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

ஊரெழு மேற்கு ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். சிவஸ்ரீ கணேசரவீந்திரக் குருக்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நிகழ்த்துவார். (எ)

## மெய்வன்மைப்போட்டி

வேலணை கிழக்கு மகாவித்தியாலய நூலகத் திறப்பு விழாவும் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு அதிபர் ந.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சறோஜினிதேவி இளங்கோவனும், சிறப்புவிருந்தினர்களாக மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு.சிவபாலன் மற்றும் வேலணைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சோ.தில்லைநாதனும் கௌரவவிருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியர் மா.இளம்பிறை, வேலணை அஞ்சல் அதிபர் க.சரவணநாதன், யாழ்.மாநகரசபை வைத்திய கலாநிதி செல்வி பொ.கலாநிதிதேவி ஆகியோர் கலந்துகொள்வர். (எ)

## பாதுகாவலர் சங்க உறுப்பினருக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்15

காணாமற்போனோர் சங்கத்தின் உறுப்பினர்களில் கொழும்பு செல்வதற்கென பதிவுசெய்த உறுப்பினர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

பதிவுசெய்த உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (எ-ரி)

## ஆலய உற்சவத்தை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்15

அரியாலை - வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு அரியாலை கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கோலப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கும் மாலை கட்டும் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமையும சமய அறிவுப்போட்டி எதிர்வரும் 19 ஆம், 20ஆம் திகதிகளிலும் ஆலய மண்டபத்தில் நடத்தப்படவுள்ளன. (எ-13)

# தரைமார்க்கமாக தபால் பொதிகள் அனுப்பும் பணி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.குடாநாட்டில் இருந்து ஏ-9 தரைவழிப்பாதை ஊடாக தென்பகுதிக்கு தபாற்பொதிகளை அனுப்பிவைக்கும் நடவடிக்கைகள் இன்றுமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கென கொழும்பில் இருந்து லொறி ஒன்று இங்கு எடுத்துவரப்பட்டுள்ளது. இந்த லொறியின்மூலம் தினமும் இங்கிருந்து தபாற்பொதிகள் எடுத்துச்செல்லப்படவுள்ளன. வவுனியா வரையும் எடுத்துச்செல்லப்படும் மேற்படி பொதிகள் பின்பு அங்கிருந்து ரயில்மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும் என வடமாகாணப் பிரதி அஞ்சல் அதிபர் எஸ்.ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

பிரதி அஞ்சல்மா அதிபர் எஸ். சேனாதீரவுடன் தொடர்புகொண்டதை அடுத்து தபால் பொதிகளை தரை மூலம் அனுப்பிவைக்க முடிவு செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான சம்பிரதாய நிகழ்வு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பிரதம தபாலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கலந்துகொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தகவல் தொடர்பு நிலையம் ஒன்றையும் யாழ். பிரதம தபாலகத்தில் இன்று திறந்து வைக்கவுள்ளார். (எ-10-ரி)

### சங்கானை ஆஸ்பத்திரியில்

# 'ரஸ்தினோ' வில்லைகள் இல்லை நீரிழிவு நோயாளர் சிரமம்

வலி.மேற்கு,ஜூன்15

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஆறு மாதங்களாக நீரிழிவு நோய்க்கு வழங்கப்படும் 'ரஸ்தினோ' வில்லைகள் நோயாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

இதனால் மாதாந்தம் மேற்படி ஆஸ்பத்திரியில் கிளினிக்குக்குச் செல்லும் சுமார் 90 நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. நோயாளர்கள் 'ரஸ்தினோ' வில்லைகளை தனியார் மருந்துக் கடைகளில் வாங்கிவருமாறு பணிக்கப்படுகின்றனர் எனவும் கூறப்பட்டது.

இதேவேளை, மேற்படி விவகாரம் வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட சங்கானை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.யோகராசா இது குறித்து பல தடவைகள் தாம் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அறிவித்ததாகவும் - 'ரஸ்தினோ' வில்லைகள் கிடைகவில்லையென்றும் - கடந்த ஆறு மாதங்களாக இந்த நிலைமை நீடித்துள்ளதாகவும் - தெரிவித்தார். (எ-175)

## பரிசளிப்பு விழா

வட்டு.மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச சங்கத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவி செல்வி க.முத்துமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் வலி.மேற்கு பிரதேச செயலர் செ.இரத்தினம் பிரதம விருந்தினராகவும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும், வட்டுக்கோட்டை பகுதி கிராம உத்தியோகத்தர்கள் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-175)

## எழுத்துப் பரீட்சை

வலி.மேற்கு,ஜூன்15

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 2ஆம் கட்ட அபிவிருத்தி தொண்டர்களுக்கான எழுத்துமூலப் பரீட்சை நாளைமறுதினம் திங்கட்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கட்டுமானம், புத்தகம் கட்டுதல், மரத்தொழில், பழம் பதனிடல் போன்ற பயிற்சிநெறிகளைச் சேர்ந்த அபிவிருத்தித் தொண்டர்கள் மேற்படி பரீட்சைக்கு சமுகமளிக்கவேண்டுமென பிரதேச செயலர் கேட்டுள்ளார்.(எ-180)

## தவறிவிட்டது

மூன்று ஜாதகக் குறிப்புகளும், ஒரு பெண் குழந்தையின் படமும் அடங்கிய பாக், மாலு சந்திக்கும் அல்வாய் உப-தபாற்காரியாலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ.சிவப்பிரகாசம், அத்தாய், அல்வாய் என்னும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/22528)


## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

சுத்திகரிக்கப்பட்ட Bairha Farm கோழி இறைச்சி 1 Kg - 200/- மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு கொடுக்கப்படும். அத்துடன் Chicken Sausages, Meat Balls, Bacon, Pork Sausages, Anchor Butter, Flora Margerine, Astra, Elephant House Sponge Roll Cake என்பனவற்றை எம்மிடம் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

*தொடர்பு:*

வரணி மிசன் பண்ணை விற்பனை நிலையம்,
145, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். T.P.: 2868
(4876)



## CENTRE FOR PERFORMING ARTS
(THIRUMARAI KALA MANRAM)

*PRESENTS*

A CONFLICT OF LOVE, HATE & JEALOUSY
THE SHAKESPEAREAN TRAGEDY

"OTHELLO"
THE MOOR OF VENICE
(ENGLISH PLAY)

ஒதெல்லோ
(ஆங்கில நாடகம்)

*DATE:* SUNDAY 16-06-2002
*TIME:* 6.45 P.M.
*VENUE:* THIRUMARAI KALA MANRAM

*ALL ARE WEL COME*

*238, Main Street, Jaffna.* - C.P.A.
*T.P. 021-2393*
*Web Site: www.cpateam.org* (C/22527)



**நாகம்ஸ்** சுன்னாகம்

அருண்குமார், சுமிதா, ரஞ்சித், மனோரமா நடித்த

**பாண்டவர் பூமி**
(நீலஸ்)

காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (புதிய நேரம்)
இனிய பாடல்கள் நிறைந்தது. (4869)

**ராஜா** யாழ்ப்பாணம்.

நாளை மட்டும்
விஜயகாந்த், லைலா, மணிவண்ணன் நடித்த

**கள்ளழகர்**

காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C/22356)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த

**ரோஜாக்கூட்டம்**
(நீலஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-22357)


# கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன் **வ.டெனீஸ்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### யோசெப் வரப்பிரகாசம்

அவர்கள் 13.06.2002 வியாழக்கிழமை காலமாகியதையிட்டு, அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்; கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

*யாழ். பல்கலைக்கழகம்.* - 20ஆம் அணி மாணவர்கள், மருத்துவபீடம்.
(4875)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலட்சுமி தம்பித்துரை

அரியாலையைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி தம்பித்துரை நேற்று (14.06.2002) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

*40/1, கலைமகள் வீதி,*
*அரியாலை.*

தகவல்:
சி.தம்பித்துரை (கணவர்) (C/22526)

### தம்பிராசா மகேந்திரன்
(நாதஸ்வர வித்துவான்)

நல்லூர், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம், புதுவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா மகேந்திரன் (நாதஸ்வர வித்துவான்) அவர்கள் நேற்று (14.06.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - இராசலட்சுமி தம்பதிகளின் அருமை மகனும் சண்முகம், காலஞ்சென்ற முத்துலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் கோபிராஜ், ரஜித்தா, கபில்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுவீதி,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.*

தகவல்:
திருமதி ம.இராஜேஸ்வரி
(மனைவி)
குடும்பத்தினர்.
(4877)

# புலிகள் பேச்சுக்கு வருவதற்கு அமெரிக்க அரசும் உதவவேண்டும்

## நியூயோர்க்கில் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ

நியூயோர்க்,ஜூன்15

அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சு மேசையை நோக்கி முன்தளளவேண்டும். சமாதானப் பேச்சுக்கான திகதியைப் புலிகள் அறிவிக்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அமெரிக்காவில் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அமைச்சர் டிரோன் கடந்த புதன் கிழமை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுடன் பேச்சு நடத்தினார்.

அதனை அடுத்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலைச் சந்தித்துப் பேசினார். இலங்கையின் சமாதானப் பேச்சுக்களின் வெற்றியில், சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்று கொலின் பவல் அமைச்சர் டிரோனிடம் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் நேரடிப் பேச்சு ஆரம்பமாகும் திகதியைப் புலிகள் அறிவிப்பதில் தான் தங்கியிருக்கிறது.

புலிகளின் பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்காக வடக்கு - கிழக்குக்கு சுயாட்சி வழங்கவும் அரசமைப்புச் சட்டத்தில் பாரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அரசு தயாராக உள்ளது என்றும் டிரோன் கூறினார். (ஐ)

### தமிழ்க் கைதிகளை விடுவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்15

நீர்கொழும்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளிடம் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கோரிக்கை விடுத்தார். வியாழன்று ஆணைக்குழு பிரதிநிதிகளுடன் நடந்த சந்திப்பிலேயே துணைவேந்தர் இந்தக் கோரிக்கை விடுத்தார். (ஐ)

### நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்15

இசைக்கலைமணி சி.துரைராசாவினால் ஸ்வர, ஸாகித்திய ஜதி அமைப்புகளுடன் எழுதப்பட்ட 'பல்லவி மாலை' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நல்லை திருஞானசம்பந்த ஆதீன மண்டபத்தில் பேராசிரியர் சபா.ஜெயராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (எ-17)

### விழிப்புணர்வு கருத்தரங்கு

மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று கொழும்புத்துறை கிழக்கு சென்.ஜோசப் வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் தலைமையில் நடைபெற்றது. (ம-13)

### விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு,ஜூன்15

நாடாளுமன்றத்துக்கான வீதியில் பத்தரமுல்லை சந்தியில் நிறுவப்பட்டிருக்கும் நாலந்த எல்லாவல உருவச் சிலைக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவைப் பணித்திருக்கிறார்.

### வைத்திய சேவை ஆரம்பம்

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் மீண்டும் இரவு, பகல் தொடர்ச்சியான வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈ.சீ.ஜீ., ஸ்கானிங், இரத்தப் பரிசோதனை போன்ற பரிசோதனைகள் இங்கு செய்யப்பட்டுவருகின்றன. (ஐ-13-52)

### கூட்டணியின் இணுவில் கிளை கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்15

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் மறைவை அடுத்து வெற்றிடமாகவுள்ள தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கூட்டணிப் பிரமுகர் ச.முத்துலிங்கத்துக்கு வழங்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணுவில் கிளை கேட்டிருக்கிறது.

மேற்படி கிளையினால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் பலத்த அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் வேட்பாளராகப் போட்டியிட்டவர் முத்திலிங்கம். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் தேசியப்பட்டியலில் இணைத்துக்கொள்ளப்பட்டவர். அவரை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்குமாறு அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-4)

### நேபாளத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான நேபாளத் தூதர் பால் பஹதூர் குன்வார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க்குடனும் தான் பேசியுள்ளதாக தூதர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை நேபாளம் ஆதரிக்கின்றது. அதற்கு ஒத்துழைப்பும் வழங்குகிறது. அவ்வாறு இருக்க விடுதலைப் புலிகளின் தலைவர் இப்படி நடந்துகொள்கிறாரே - என்று நேபாளத்தூதர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாவோயிஸ்டுகளுக்கு புலிகள் வழங்கும் உதவிகள் தொடர்பாக நேபாளத்தின் இடைக்காலப் பிரதமரிடம் ஐந்து பக்க அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும் தூதர் குன்வார் கூறியதாக ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-4)

# கடற்றொழில் நிலைமையை மதிப்பிட கடற்படைக் குழு

## திங்களன்று யாழ். வரும்

யாழ்ப்பாணம்,ஜூன்15

குடாநாட்டில் மீன் பிடிப்பதற்கு நடைமுறையில் இருந்துவந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் பிரதேசம் ஆகியன தொடர்பாக நேரில் ஆராயவெனக் கடற்படையின உயர் மட்டக்குழு ஒன்று நாளைமறுதினம் யாழ்ப்பாணம் வருகின்றது.

கடற்படை அதிகாரியான ரியர் அட்மிரல் வியேவிக்ரம தலைமையிலான குழுவே யாழ்ப்பாணம் வருகின்றது.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த உயர்மட்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமுல்செய்வது தொடர்பாக இக்குழு நேரடியாக ஆராயும் - என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் யாழ். செயலகத்தில் இடம்பெறும் கூட்டம் ஒன்றிலும் இக்குழு பங்குபற்றும். (ஐ-3)

### போட்டிப் பரீட்சை

கொழும்பு,ஜூன்13

பொதுச்சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக் குழுவினால் ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை III இற்கு ஆள்களைச் சேர்க்கும் போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சை ஒக்ரோபர் மாதத்தில் கொழும்பில் மாத்திரமே நடைபெறும் எனவும் -

12.07.2002 ஆம் திகதிக்கு முன்னராக அதிபர் சேவை தரம் I இல் மூன்று வருடங்களைப் பூர்த்திசெய்து சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் இப்பரீட்சையில் தோற்றலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்கள் 14.06.2002 ஆம் திகதி வெளியான 1241 இலக்கத்தைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.(ஐ)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் விற்பனை நிலையங்களை நிறுவ உத்தேசித்துள்ளோம்.

திருகோணமலையில் பழுதடைந்த நிலையில் உள்ள எண்ணெய்க் குதங்கள் திருத்தப்பட்டும் எமது சேவை விரிவுபடுத்தப்படும் என்றார் அவர்.(ஐ-3)

### வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது மீண்டும் போராட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பிரதேச செயலகம் முன்பாக நடத்தப்படவுள்ள மறியல் போராட்டம மற்றும் யாழ். அரச செயலகத்தை நோக்கிய பேரணி ஆகியவற்றுககான ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்களையும் வலி.வடக்கு விவசாயிகள் சங்க உறுப்பினர்களையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-3)

### இந்தியாவின் புதிய தூதுவராக நிருபம் சென்

இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றும் கோபால கிருஷ்ண காந்தி எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் நோர்வே நாட்டிற்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்குத் தற்போது நோர்வேயில் இந்தியத் தூதுவராகப் பணியாற்றும் நிருபம் சென் நியமிக்கப்பட்டுள்ளார். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நிருபம் சென் இலங்கைக்கான பிரதித் தூதுவராகப் பணியாற்றினார். அப்போது இந்தியத் தூதுவராகப் பணியாற்றியவர் ஜே.என்டிக்சிற் ஆவார். (ஐ)

### தரைவழியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்ட 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவை இவ்வாரத்துடன் நிறுத்தப்பட்டுள்ளதாக கப்பல் முகவர் அறிவித்துள்ளார். (ஐ-3)

### ஊடகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின்னர் அங்கு இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றுவார்.

நாளை காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடகத்தகவல் மையத்தைத் திறந்துவைக்கும் அமைச்சர் பின்னர் பத்திரிகையாளர்களுக்கான கருத்தரங்கை ஆரம்பித்துவைப்பார்.

பருத்தித்துறையில் புதிய தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தை அமைச்சர் திறந்துவைப்பார். (ஐ-3-10-15)


யுனைட்ரட் புறுவரி லிமிட்டெட்

எங்கள் உற்பத்திப் பொருள்களைக் கீழ்க்காணும் சில்லறை விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| கிங்ஸ் லாகர் | 60/= |
| கிங்ஸ் ஸ்ரவுட் | 80/= |
| கிங்ஸ் பைசன் (ஸ்ரோங்) | 95/= |
| கிங்ஸ் பில்ஸ்னர் | 75/= |

கிங்ஸ் என்று கேட்டு வாங்குங்கள்!

உத்தரவு பெற்ற சகல மதுபான நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகத்தர்கள்:

வாமாஸ்

T.P. 2989 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4853)

A/L 2004

பிரிவு II

பொருளியல்

ஆரம்பம்:

15.06.2002 சனி 1.00 மணி.

P.Mohan B.B.A. (Hons)

ஸ்ரார் கல்வி நிலையம்

சுன்னாகம்

எமது புதிய வீடியோ CD வெளியீடு

குணாலின

எங்கே எனது கவிதை...

ஓடியோ CD வெளியீடு

இவன் (பிரதிகள் உடன்பெறலாம்)

I.T.N

பலாலிவீதி, பரமேஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்

(4871)

எமது புதிய வீடியோ CD வெளியீடு

குணால், அஸ்வினி, மணிவண்ணன், தாமு நடித்த

எங்கே எனது கவிதை

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(C/22529)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்படுகின்ற வயீரா பாம் இறைச்சிக்கோழி, பீக் போல்ஸ், சொயன் சீயஸ் மற்றும் - பாட்ஸ் துண்டுகளும் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: T.கரன்,

முட்டைக் கடை (அப்பிள் கடை), 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(4825)

IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS

IBMS DOUBLE + SCHOLARSHIP PROGRAM 2002/2003

தவிர்க்க முடியாத காரணங்களால் 08-06-2002 இல் ஆரம்பிக்கவிருந்த வகுப்புகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன...

Batch A : 15 - 06 - 2002 Saturday 10.00 AM

Batch B : 29 - 06 - 2002 Saturday 10.00 AM

உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்...

Institute of Business Management Studies

Head Office: No.701, K.K.S. Road, Jaffna.

Branches : Main Road, Chankanai, N.M.M.V. Road, Nelliyadi.

Phone :- 021 3165 EMail : ibms@sltnet.lk

IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS

MARBLES FLOOR POLISHING SERVICES

மாபிள்ஸ் நிலங்கள் மினுக்கும் சேவை

பழைய ரெறாசோ நிலங்களையும், ஏனைய நிலங்களையும் மெஷின் மூலமாக மினுக்கி, புதுமெருகூட்டி அழகாக்க நாடுங்கள்:

மாபிள்ஸ்

42, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P. 2328.

தொல்புரம், சுழிபுரம்.

நாம் முன்னர் வேலைசெய்த நிலங்களுக்கு கழிவு உண்டு.

புதிதாகப் போடும் ரெறாசோ வர்ண வேலைகளுக்கு ஓடர் எடுக்கப்படும்.

(C/22315)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.